உ

சிவமயம்



# சைவநீதி
# SAIVANEETHI

மலர் 10 | விய - கார்த்திகை | NOVEMBER - DECEMBER 2006 | இதழ் 8



விலை 25/=

Registered as a News Paper at the G.P.O.


உ

சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவநீதி

SAIVANEETHY



மலர் 10 விய - கார்த்திகை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 8

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 18

## பிறவிப் பயனைக் கொடுக்கும் பதிகம்

**எல்லா சனனங்களையும் தப்பி, மேலான இந்த மானிடப் பிறப்பை எடுத்ததன் நோக்கம் பரம்பொருளை அடைவதற்கே ஆகும். நம்முடைய கருவிகரணங்கள் யாவும் இறை வணக்கத்திற்கே பயன்படல் வேண்டும். அப்பொழுதுதான் இந்த சீவன் ஆணவமலம் நீங்கப்பெற்று 'சிவமாக மாறும்' இத்தகைய பெரும்பேறு அடைய விரும்பும் சிவநேயச் செல்வர்கள் இப் பதிகத்தைத் தினமும் ஓதி பயன் அடையலாம்.**

**திருச்சிற்றம்பலம்**

பொது — பண்: சாதாரி

தலையே நீ வணங்காய் ~ தலைமாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீ வணங்காய் 1

கண்காள் காண்மின்களோ ~ கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும் பிரான்தன்னைக் கண்காள் காண்மின்களோ 2

செவிகாள் கேண்மின்களோ ~ சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ் செவிகாள் கேண்மின்களோ 3

மூக்கே நீமுரலாய் ~ முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய் 4

வாயே வாழ்த்து கண்டாய் ~ மதயானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை வாயே வாழ்த்துகண்டாய் 5

நெஞ்சே நீநினையாய் ~ நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய் 6

கைகாள் கூப்பித்தொழீர் ~ கடிமாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர் 7

ஆக்கை யாற்பயனென் ~ அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றி என்னாதஇவ் ஆக்கை யாற்பயனென் 8

கால்களாற்பயனென் ~ கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்களாற்பயனென் 9

உற்றாராருளரோ ~ வுயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லாமைக் குற்றாராருளரோ. 10

இறுமாந்திருப்பன்கொலோ ~ ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங்கு இறுமாந் திருப்பன் கொலோ 11

தேடிக் கண்டுகொண்டேன் ~ திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டு கொண்டேன் 12

**திருச்சிற்றம்பலம்**

# பொருளடக்கம்

1. சைவசமயப் பிடிப்போடு வாழ்வோம் ........................................ 3
2. தர்மாஸ்திரத்தில் ஆலயம் ........................................ 8
3. திருவருட்பயன் ........................................ 11
4. கும்பாபிஷேக தத்துவார்த்தம் ........................................ 13
5. திருமூலர் திருமந்திரம் ........................................ 19
6. மூர்த்திகளின் அபேதம் ........................................ 21
7. உக்கிரபாண்டியர் ........................................ 23

## நினைவிற் கொள்வதற்கு

*விய தை*

| | | | |
|---|---|---|---|
| 01. | 15.01.2007 | திங்கள் | தைப்பொங்கல் |
| 02. | 16.01.2007 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 04. | 18.01.2007 | வியாழன் | அமாவாசை விரதம் |
| 08. | 22.01.2007 | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| 10. | 24.01.2007 | புதன் | ஷஷ்டி விரதம், கலிக்கம்ப நாயனானர் குருபூசை |
| 13. | 27.01.2007 | சனி | கார்த்திகை விரதம் |
| 15. | 29.01.2007 | திங்கள் | கண்ணப்பநாயனார் குருபூசை |
| 16. | 30.01.2007 | செவ்வாய் | பிரதோஷ விரதம், அரிவாட்டாய நாளனார் குருபூசை |
| 18. | 01.02.2007 | வியாழன் | பூரணை விரதம், தைப்பூஷம் |
| 23. | 06.02.2007 | செவ்வாய் | சங்கடஹரசதுர்த்தி விரதம், சண்டேசுவரநாயனார் குருபூசை |
| 27. | 10.02.2007 | சனி | திருநீலகண்டநாயனார் குருபூசை, தாயுமான சுவாமிகள் குருபூசை |

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.
- இதழ் நிர்வாகிகள் -

# சைவசமயப் பிடிப்போடு வாழ்வோம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

## திவ்வியம் பழுத்தசைவம்

**சமயமேலாறு மாகித் தானொருசுயம்புவாகி**
**இமையவர் பரவி யேத்த இனிதினங் கிருந்த வீசன்**
**கமையினை யுடைய ராகிக் கழலடி பரவு வார்க்கு**
**உமையொரு பாகர் போலும் ஒற்றியூருடைய கோவே**
4 : 45, 5 திருமுறை

சமயம் வாழ்வின் முழுமைக்கோர் அங்கமாய் இருந்தநிலை முற்றுமுழுதும் மாறி, வாழ்வு நீரோட்டத்தில் அஃதோர் விழுமியம் மிக்கதென்பதை மறந்து சினிமா, ட்ராமா பார்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கும் காலமிது. ஊடகங்களும் கொண்டாட்டங்கட்கும், சினிமாப்பாடல்கட்கும் வெறும் விளம்பரங்கட்கும் முன்னிரிமை வழங்கக் காணலாம். அரைத்த மாவை அரைப்பது போல பழைய பல்லவிகளையே பாடக்காணலாம். அபினிமாதிரி இவற்றிலேயே தம்மைத் தோய்ந்து வாழும் தமிழ்ச் சமுதாயம் சமய ஆளுமைகளைத் தன்னாலே இழக்கின்றனர். வெற்றாரங்களிலும், ஆடம்பரங்களிலும், சடங்கு சம்பிரதாயங்களிலும் மூழ்கி சமய வாசனையைக் கழுவித் தள்ளி போலிச் சமயிகளாய் வாழ்கின்றோம். எமது நிலைமையை உள்ளார்த்தமாக உதறித்தள்ளிவிடுகின்றோம். இந்தநிலை வளர்ந்தால் எம்சமயநிலையென்னாகும். நாம் நம் பரம்பரை என்னாகும். நம் சிறப்பான சைவசமயம், சமய நாட்டம், பண்பாட்டியல், அறப்பாங்கு, செவ்வியும், செப்பமும் சிறப்பும் நிறைந்த மனித விழுமியங்கள் சீர்குலையும், வாழ்க்கைப் பயணம் தடம்புரளும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைவிட, மோசமான சூழ்நிலையை இம்மிலேனியம் எதிர்கொள்வது ஆரோக்கியமாய்த் தோன்ற வில்லை, பீடிப்புகைக்கும் சாம்பிராணி, குங்குலியப் புகைக்கும் பேதந்தெரியாத நிலைதான். கைப்புத்தகம் போய்க் கைத்தொலைபேசி இடம் பெற்றுவிட்டது. சம்மதம், சமரசம் பேசுவதின் அர்த்தம் புரியாமல் வாழ்கின்றனர். இந்து மதம் எது, சைவசமயம் எது எனத்தெரியாத, புரியாத நிலைப்பாட்டிற்கு நாம் பின்தள்ளப் பட்டிருக்கிறோம். கிறீத்தவர்கள், இந்து மதத்தில் இருக்கும் பெலவீனமே அவர்களை மதம்மாறச் செய்கிறது எனக் கூறுகின்றனர். பல மதவாதிகள், பல தாபனங்கள், சங்கங்கள், சபைகள், நவீன சமய நோக்காளர் நம்முள் ஊடுருவி செல்வாக்குப் பெறுகின்றனர். விவேகானந்தர், மனப்பெலவீனம் உள்ளவர்களை மனத்திடம் உள்ளவர்கள் மாற்றி விடுகிறார்கள் எனச்சொன்னார். புதிய பொருந்தாத, சைவத்துடன் தொடர்பில்லாத கடவுள் வழிபாடு திட்டமிட்டுப் புகுத்தப்படுகிறது. இதைச் சைவசித்தாந்திகள் பாராமுகமாய் இருப்பர். சிலர் ததாஸ் சொல்லி ஏற்றுக் கொள்வர். காலத்துக்கேற்ற மாற்றம் வேண்டு மென்போரும் சைவத்தை மெலிவடையச் செய்கின்றனர். அன்பே சிவம் என்பதை வம்பே சிவம் என எழுதிச் சைவ சமயத்தைக் கொச்சைப் படுத்தவும் சிலர் முயல்கின்றனர். பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் எனப்பாரதி பாடியதை நாம் சிந்திக்க வேண்டிய காலமிது.

சமகால நோக்கில் இன்றைய சைவத்தின் நிலைப்பாட்டையும், நாவலர் யுகத்தின்

**பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
**பெருகலிற் குன்றல் இனிது** 811

காதல் மிகுதியால் உறிஞ்சிக் குடித்து விடுபவர் போல் தோன்றினாலும், நற்பண்பு இல்லாதவரின் நட்பு வளர்வதை விடத் தேய்ந்துபோதல் நல்லது.

நம்நாட்டுச் சமய நிலையையும் ஒப்பாய்வு செயின் உண்மையான தளம் புலப்படும். இன்று பல தேயங்களில் இடம்மாறி வாழும் சைவசமயிகள் மதமாற்றம் செய்யப்படுகின்றனர். மடிநிரப்பும் விபரர்களால், வடநாட்டில் இருந்துவரும் சோதிடர்களால், சாமிமார்களால் ஏமாற்றமடைகின்றனர். அன்று ஒரு நாவலர் என்ற தனிமனிதர் சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் தமிழர் சமுதாயத்தையும் காக்க வீறுகொண்டு எழுந்தார். தன் முழு ஆளுமை முயற்சி நேரம் என்பவற்றை ஒருமுக மாக்கி ஒரு இரட்சகராகத் தொழிற்பட்டார். அவரின் சேவையால் நாம் இன்றும் சைவ சமயிகளாய் வாழ்கின்றோமின்று, அன்றைய அறிவு சீவிகள், அந்தணர்கள் ''சற்குரு நாத சுவாமிகள்'' எனப்போற்றினர் நாவலர் பெருமானை.

சைவம் சிவசம்பந்தமானது, சைவசமயிகள் சிவசம்பந்தம் உள்ளவர்கள். எனவே சிவபெருமானையே முழுமுதற் பொருளாய் வழிபட்டனர். வழிபட்டு வருகின்றனர். இதற்கான (சிவ) சின்னங்கள், நடைமுறைகள், ஒழுகலாறுகள், ஆசார சீலங்கள் வழிபாடுகள், உணவமைப்பு, வழிபாட்டுமுறைகள், தத்துவங்கள், சாத்திர தோத்திரங்கள், புராணங்கள், அனுட்டானங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற சமயச் சிந்தனைகள் காலந்தோறும் நிதானமாய் வகுக்கப்பட்டு எழுதப்பட்டுமுள்ளன. இவற்றைப் புதுக்கியும், திருத்தியும், ஒவ்வாதவற்றை மாற்றியும் நடைமுறைப்படுத்தப்பலர் முயன்றார்கள். இவற்றைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க நாம் தவறக்கூடாது.

*சிவனெனுமோசையும் சைவம்எனும் பாசையும்*

**சிவனெனு மோசை யல்லதறையோ வுலகிற்**
**றிருநின்ற செம்மை யுளதே**
**அவனுமோ ரையமுண்ணி யதளாடையாவ**
**ததன்மேலோ ராட லரவம்**
**கவணளவுள்ள வுள்கு கரிகாடு கோயில்**
**கலனாவ தோடு கருதில்**
**அவனது பெற்றி கண்டு மவனீர் மைகண்டு**
**மகனேர்வர் தேவ ரவரே**

4 : 8.1 (திருமுறை)

**சைவ சமய மேசமயம்**
**சமயாதீதக் பழம்பொருளைக்**
**கைவந் திடவே மன்றுள் வெளி**
**காட்டும், இந்தத் கருத்தைவிட்டுப்,**
**பொய்வந்து உழலும் சமய நெறி**
**புகுத வேண்டாம், முத்திதரும்**
**தெய்வ சபையைக் காண்பதற்குச்**
**சேர வாரும் ஜகத்தீரே.**

30 காடும் கரையும் 2 (தாயுமானசுவாமிகள்)

சமயாதீதப்பழம் பொருளை - சமயங்களுக்கு எட்டாத முதல்வனை மன்றுள் - சிதம்பரத்தில், இந்தக்கருத்தைவிட்டு - இந்த உண்மையினின்று பிசகி, பொய்வந்து உழலும் சமய நெறி. தத்துவத்தினின்று தவறும் போலிச்சமய நெறிகளில் சிவம் செம்மையென்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்தது, செம்மை, நேர்மை, சிறப்பு, மங்கலம், சுகம் என்ற பண்புகளையும், செந்நிறத்தையும் குறிப்பதுதான் சிவம் என்ற (பதம்) பிரயோகம். கவலை யில்லாதவன் என்பார் என்குரு தேவர் சபாரத்தினம் சுவாமிகள் (திருவாசக சுவாமிகள்) சிவலை - சிவன் செந்நிறத்தன், வெண்ணீற்றன் அவன் அவனே சிவபெருமான். அதைச் செம்பொருள் என்றார் செந்நாப்போதார்.

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்**
**செம்பொருள் காண்ப தறிவு**

மெய்யுணர்தல் 358 (திருக்குறள்)

''எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாதலால் வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக் கேடுகள்

**உறின் நட்டு அறின்ஒரூஉம் ஒப்புஇலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என் 812**

**தமக்கு ஒரு பயன் உள்ளபோது நட்புச் செய்து அது இல்லாதபோது நீங்கி விடும் உள்ளம் பொருந்தாதவரது நட்பைப் பெற்றாலும், பெற்றபின் இழந்தாலும் இரண்டுக்கும் என்ன வேறுபாடு உண்டு? ஒன்றுமில்லை.**

இன்மையின் நித்தமாய், நோன்மையாற் தன்னை ஒன்றுங் கலத்தலின்மையாற் தூயதாய்த் தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி, அதனைச் செம்பொருள் என்றார் - பரிமேலழகர் - முனைவன் வாலறிவன் என்ற வழக்காறும் சிவனோடு தொடர்புடையனவே.

சிவம் சார்ந்த சைவநெறியிலே வாழ்பவர்கள்தான் சைவசமயத்தவர். சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் போன்றோர் சைவப் பெரியார்கள். இவர்கள் எது சைவம், எது இந்து சமயம் என்பதை விளக்கி ஆங்கிலத்தில் நூல்கள் வெளியிட்டுள்ளார். ஆங்கில மூலம் படித்த மாணவர்கள் இந்துசிம், சைவாசிம் என்ற நூல்களைப் படித்துப் பரீட்சை எழுதிப் பாஸ்பண்ணினர்.

இறைவனையே சைவனாகக்காட்டும் சைவத்திருமுறைகள்

**சீருறு தொண்டர் கொண்டடி போற்றச்**
**செழுமலர் புன லொடுதூபந்**
**தாருறு கொன்றை தம்முடி வைத்த**
**சைவனார் தங்கிட மெங்கும்.**
**ஊருறு பதிக ளுலகுடன் பொங்கி**
**யொலி புனல் கொளவுடன் மிதந்த**
**காருறு செம்மை நன்மையால் மிக்க**
**கழுமல நகரெனலாமே.**

3:118.3 (திருமுறை)

**சைவத்தசெவ் வுருவன்திரு நீற்றன்வரு மேற்றன்**
**கைவைத்தொரு சிலையால் அரண்மூன்றும் எரி செய்தான்**
**தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன் திருச்சுழியல்**
**மெய்வைத்தடி நினைவார்வினை தீர்த்தல் எளிதன்றே.**

**பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்**
**கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்**
**தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்**
**ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக்**
**கொண்டன்றே.**

கிழியீடு - பொற்கிழி, பொன்முடிப்பு 8.40.9.
திருவாசகம் கிழியீடு - நிதிப்பொதி

**ஈங்கோய்மலையில் எழிலது காட்டியும்**
**ஐயாறு அதனில் சைவனாகியும்**

மேலது 2. வரி. 84.85

**ஐயா போற்றி அணுவே போற்றி**
**சைவா போற்றி தலைவா போற்றி**

மேலது 4. வரி. 112-113

**அனலமே! புனலே! அனிலமே! புவனி**
**அம்பரா! அம்பரத்(து) அளிக்கும்**
**கனகமே! வெள்ளிக்குன்றமே! என்றன்**
**களைகணே! களைகண் மற்றில்லாத்**
**தனியனேன் உள்ளம் கோயில் கொண்டருளும்**
**சைவனே! சாட்டியக் குடியார்க்கு**
**இனியதீங் கனியாய் ஒழிவற நிறைந்(து) ஏழ்**
**இருக்கையில் இருந்தவா(று) இயம்பே.**

9.15.6. திருவிசைப்பா

அனலம் - தீ, புனல் - நீர், அனிலம் - காற்று, புவனி - பூமி அம்பரம் - விண், களைகண் - பற்றுக்கோடு, கொழு கொம்பு, ஏழிருக்கை சாட்டியக்குடியிலுள்ள கோயில், சைவன் - சிவம் (மங்கலம்) சைவன் சிவபெருமானைக் குறிக்கும் போது, சிவன் என்னுஞ் சொல் பண்பினை உணர்த்தும்.
புலவர். பி.ரா.நடராஜன்

இவ்வண்ணஞ் சிவனும் சைவனும் ஒன்றாகப் பேசுவது போல சைவமுஞ்சிவமும் வேறுபடாதவையே இதையடுத்து இன்று பலராலும் இந்து மதம் என்று பேசப்படும் சமையம்

**உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாரும் கள்வரும் நேர்** **813**

நட்புக் கொள்ளப்படுபவரின் தகுதியை நோக்காமல் அவரால் கிடைக்கும் பயனை மட்டும் அளந்து பார்க்கும் தன்நல நண்பரும் தருபவரை உள்ளத்தில் கொள்ளாமல் அவரிடமிருந்து பெறுவதை (பொருளை) மட்டும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் விலைமாதரும், பிறர் துன்பத்தை நோக்காமல் தாம் பறிக்கும் பொருளை மட்டும் நோக்கிக் களவாடும் கள்வரும் சமம்.

சைவமல்ல. இறைவனை இந்து என்று திருமுறைகள் குறிப்பிடவில்லை. இதைப் புரிந்து கொள்வது எல்லார்க்கும் முக்கியமாம். ஆக இந்தச் சமயம் பற்றிய உண்மைகளைத் தாயுமான சுவாமிகள் திருமூலமுனிவர் வாக்கினால் அறிவோம். எனவே சிவமே சைவம், சைவமே சிவம் சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவசம்பந்தம் உடையவர்கள் சைவர்கள். யார்சைவர்கள் - சிவசம்பந்தம் உடையவர்கள் சைவர்கள். சிவசம்பந்தம் இல்லாதவர் தீண்டத் தகாதவர் யார் தீண்டத் தகாதவர் - சிவசம்பந்தம் இல்லாதவர்கள் தீண்டத்தகாதவர் என இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை கூறியுள்ளார்.

தெய்வம் சிவமே சிவனருள் சமயம்
சைவம் சிவத்தொடு சம்பந்தம் - என்றார் சிற்றம்பலநாடிகள்.

**வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித்**
**தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்**
**ஊழ்பெறல் அரிது சாலவுயர்சிவ ஞானத்தாலே**
**போழின மதியினானைப் போற்றுவர் அருள்பெற்றாரே.**

சிவஞானசித்தியார்

**சிவனொடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொ டொப்பார் இங்கு யாரும் இல்லை**

திருமந்திரம் 5

**சைவஞ் சிவனுடன் சம்பந்தமாகுதல்**
**சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்**
**சைவஞ் சிவந்தனைச் சாராமல் நீங்குதல்**
**சைவஞ் சிவானந்தம் சாயுச்சியம்**

திருமந்திரம் 1512

திருமுருக கிருபானந்தவாரியாரின் சிந்தனையிலிருந்து

**"சிவத்துடன் தொடர்பு கொண்டது சைவம் சிவா ~ கல்**
**கல்லின் தொடர்புடையது சைவம் திலத்தின் தொடர்புடையது**
**தைலம், இதேபோல சிவசம்பந்தமுடையது சைவம் என்றுணர்க"**

''எல்லாச் சமயங்களையும், தன்னகத்தே கொண்டு, அவைகளைப் பகுமுறையாகக் கொண்டு, அவைகளுடன் பிணங்காமல் இணங்கி. பாதரசத்தால் கரந்து மறையும் மற்றைய லோகங்கள் போலன்றி, நின்று நிலைத்துத் தங்கும் பத்தரை மாற்றுத் தங்கம் போல் தன்னியல்பு என்றும் பொன்றாது, இயமம், நியமம் முதலிய அட்டாங்கயோக நெறிகளைக் காட்டி, இன்பத்தை அருளவல்லதும், மற்றைச் சமயங்கள் அனைத்தும் தமக்கும் பரிவாரமாக விளங்க, சிட்சை, வியாகரணம் சோதிடம். சந்தஸ், கற்பம், நிருத்தம் முதலிய வேதாங்கங்கள் வணங்க, மௌனம் என்னும் மகுடத்தைச் சிரத்திற் தரித்து அரசு புரிவது வைதிகசமயம் என உணர்க''

**செப்பரிய சமயநெறி எல்லாம் தந்தம்**
**தெய்வமே தெய்வம் எனும் செயற்கையான்**
**அப்பரிசாளரும் அஃதே பிடித்து ஆலிப்பால்**
**அடுத்த அந்நூல்களும் விரித்தே அநுமானாதி**
**ஒக்கவிரித்து உரைப்பர், இங்ஙன் பொய்மெய்என்ன**
**ஒன்று இலைஒன்று எனப்பார்ப்பது ஒவ்வாது ஆர்க்கும்,**
**இப்பரிசு ஆம் சமயமுமாய், அல்ல ஆகி,**
**யாது சமயமும் வணங்கும் இயல்பது ஆகி**
**ஆலிப்பால் ~ ஆராய்ந்தால்**

**இயல்பு என்றும் திரியாமல் இயமம் ஆதி**
**எண்குணமும் காட்டி அன்பால் இன்பமாகிப்**

**அமர்அகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை** 814

**போர் வரும் முன்பெல்லாம் தம்மை எந்த நிலைமையிலும் தாங்குவது போலிருந்தது, அது வந்தபின் களத்தில் தன்னைக் கீழே தள்ளிவிட்டு ஓடிப்போகும் பயிற்சியில்லாக் குதிரை போன்றவரின் நட்போடு இருத்தலை விடத் தனித்து இருத்தல் சிறந்ததாகும்.**

பயன் அருளப் பொருள்கள் பரிவாரம் ஆகிப்
பண்பு உறவும் சௌபான பட்சம் காட்டி
மயல் அறுமந்த் ரசிகைஷ ஜோதி டாதி
மற்று அங்க நூல் வணங்க, மௌனமோலி
அயல்வு அறச் சென்னியில் வைத்து, ரஜாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகு இது
அந்தோ.

இயமம் ஆதி எண்குணமும் - இயமம் முதலான எட்டு அங்கங்களை உடைய யோகமும், சௌபான பட்சம் காட்டி - படிப் படியாக மேல் நோக்கிப்போகும் உபாயத்தைக் காட்டி, மந்த்ரசி கைஷ வேதத்தில் உள்ள மந்திரமும் சிகைஷயுமாகிய பகுதிகள் ஜோதி பாதி - ஜோதிடம் முதலான, அங்கநூல் உடன் அமைந்தநூல், மௌன மோலி - மௌனநிலையாகிய கிரீடத்தினை

அந்தோஈது அதிசயம் இச்சமயம் போல் இன்று,
அறிஞர் எல்லாம் நடு அறிய அணிமாஆதி
வந்து ஆடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்று மற்றும்
இந்த்ராதி போக நலம் பெற்ற பேர்க்கும்,
இது அன்றித் தாயகம் வேறு இல்லை இல்லை
சந்தான கற்பகம் போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியேதான் சன்மார்க்கம்

போக நலம் - இன்பவாழ்வு, சந்தான கற்பகம் - ஓயா மற்கொடுக்கின்ற கற்பகமரம்

என்று அனுபூதிமானாகிய தாயுமானப் பெருந்தகையார் அருளிச் செய்கின்றார். அட்டமாசித்தி கற்றாரும், இந்திராதி போகநலம் பெற்றாரும் இச்சைவ சமயத்தையே தமக்குத் தாயகமாகக் கொண்டு உய்கிறார் என்று கூறும் அருமையும் பெருமையும் பெற்றது சைவம்.

## கந்தர் அநுபூதி முன்னுரை

### இந்து என்ற சொற்பாவனை

இந்தியாவின்வடமேல் பகுதியில் ஓடியது சிந்துநதி, சிந்துநதி நாகரிகம் பழைமையானது. இங்கே சிவவழிபாடு இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. பேர்சிய மக்களுக்கு சிந்து என நாவில்வராது எனவே அவர்கள் ஹிந்து எனப் பேசினர். சிந்து இந்துவான செய்தி இப்படியொன்று பேசப்படும் இந்தியா என்று இன்று நாட்டைக் குறிக்கும் பெயர் சிந்து என்ற ஆற்றைக் குறிக்கும் பெயர் வழிப்பிறந்ததே. மழைத்துளிகள் சிந்தி உருவாகுவனவே ஆறுகள் குமரிக்கண்டத்தில் பண்டு ஓடிய ஆறு பல்துளி - பஃறுளி ஆயிற்றெனக் கூறும். (தேவ நேயப்) பாவாணர் சிந்துவை அதனோடு இணைப்பார் சிந்து ஆற்றைக்குறித்த பெயர் பின்னர் சிந்துவை ஒட்டிய பகுதியைக் குறித்தது. ஆரியர் சிந்து ஆற்றுக்கரையில் வந்து தங்கியபிறகு ஆரிய நாகரிகம் இந்து நாகரிகம் ஆயது இந்தச் சிந்துவே பிறகு பாரசீகர் நாவில் ஹிந்துவாக மாறியது. இந்து ஹிந்துவே ஆங்கிலேயர் காலத்தில் Hinu, Indu, India என மாற்றம் பெற்றது. இன்று முழு இந்திய நிலப் பரப்பையும் குறிக்கும் நாட்டுக்குரியதாயிற்று. தமிழ்க் கப்பல் பக் 48, 49, முனைவர்க்கு அரசேந்திரன் சிந்து வெளிநாகரிகம் தமிழ் நாகரிகம் என்றதுடன், அது தெற்கே இருந்து, வடக்கே போனநாகரிகமேயன்றி இந்தியாவைத் தாண்டிவேறெங்குமிருந்து இறக்குமதியான நாகரிகமல்ல.

இன்னும் வரும் ....

செய்தஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று 815

பாதுகாப்புத் தருமென்று கருதிச் செய்து வைத்தாலும், பாதுகாப்பு ஆகாத கீழோரது தீ நட்பினைப் பெறுவதை விடப் பெறாதிருத்தல் நல்லது.

# தர்மாஸ்திரத்தில் ஆலயம்

சைவப்புலவர் மணி வ. செல்லையா

வையத்து வாழ்வாங்கு வாழுதலே அருட் தருமம் என்று கூறப்பட்டிருக்கிறது. "தருமந்தன் வழிச் செல்கை கடன் என்று ஒரு மைந்தன் மருமந்தன் தேராழி உறஊர்ந்தகன்" ஓர் அரசன். அந்த அரசனின் "அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றெளிதோ? தான்" என்று பெரிய புராணத்தில் வினா எழுப்புகிறார். சேக்கிழார் பெருமான். மனுநீதியைக் கடைப்பிடித்தொழுகிய மன்னனும் 'மனுநீதி கண்ட சோழ அரசனானான்.

கர்ப்பதானம் முதலாக மரண பரியந்தம் வரை அதற்கும் அப்பால் பிதிர்க்கடன் ஈறாக மனித வாழ்க்கையில் தர்மசாஸ்திரம் பெரும் பங்கு வகிக்கிறது. மனு, பராசர், போதாயனர் ஆபத்தம்பர் முதலாம் பதினெட்டு மகா ரிஷிகள் தர்ம சாஸ்திரங்களைத் தொகுத்து உலகத்துக்கு அளித்துள்ளனர். ஒவ்வொரு மனிதனும் தனது நலனுக்கும் உலகநலனுக்கும் உழைக்க வேண்டியவனாகிறான். மனிதனின் செயற்பாடுகள் நினைவுகளை அறநெறியில் வழி நடத்தவே சட்டக் கோவையென்ற முறையில் தர்ம சாஸ்திரம் உருவாகியது. ஒழுக்கம் பழக்க வழக்கங்கள் என்பவற்றை மனித வாழ்க்கையில் புகுத்தவே மதங்கள் தோன்றின. மதம் இறை உணர்வை உண்டாக்கி மனிதனுக்கு பயபக்தியை நல்குகிறது. 'அஞ்சுவதற்கு அஞ்சுதல் அறிவுடைமை.' என்று வள்ளுவரும் கூறுகின்றார். அஞ்ச வேண்டாதற்கு அஞ்சுதல் மடமை என்பதனையும் நினைவு கொள்ள வேண்டும். நாம் தீங்கினைச் செய்தால் அதற்காக அஞ்ச வேண்டும். "புண்ணியம் ஆம்", "பாவம் போம்" என்பவற்றை நாம் சிறிது சிந்திக்க வேண்டும். புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் விலக்கத்தக்கது என்பதே அவற்றின் பொருள். விதித்தது புண்ணியம் விலக்கியது பாவம், விதித்ததைச் செய்து விலக்கியதை ஒழிதலே அறச் செயல். இதற்கு மாறாக நிற்பது தருமமன்று.

இங்ஙனமாகப் பலவிடயங்களை விளக்கத்தோடு எடுத்துக்கூறி மானிட வாழ்க்கையை நெறிப்படுத்தத் தோன்றியவையே தர்ம சாத்திரங்களாகும். அவற்றில் ஆலயம் சம்பந்தமாகக் கூறப்பட்ட விடயங்களை எடுத்துக் கூறலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆதிவாசியின் இறை உணர்வு விசித்திரமானது. தன்னைப் பயங் கொள்ள வைக்கும் ஒலி, ஒளியை (இடி முழக்கம், மின்னல்) அவன் வணங்கியுள்ளான். பாரிய மரங்களை வணங்கியுள்ளான். அறிவு வளர அவனும் வாழ்க்கையில் வளர்ந்து சூரியன், சந்திரன், காற்று, மழை, (நீர்) ஏனைய இயற்கைகளை வணங்கலானான். பின்னர் இவற்றுக்கு மேலாக ஒரு சக்தி உண்டென்று நம்பி அதன் சின்னமாக ஒரு கல்லை நட்டோ மரமொன்றை நாட்டியோ அவற்றை வழிபடலானான். இப்படியான நிலைகளைக் கடந்து மனிதன் ஆலயம் அமைத்துச் சில

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதஇன்மை கோடி உறும் 816

அறிவில்லாதவனுடைய மிக நெருங்கிய நட்பைவிட, அறிவுடையவரின் பகைமை கோடி மடங்கு நல்லதாம்.

விக்கிரகங்களைப் பிரதிட்டை பண்ணி யந்திரஸ்தாபனம் மந்திரவுச்சாடனம் மூலம் இறைவனை எழுந்தருளப் பண்ணி வழிபடலானான். இது மனித வளர்ச்சியின் பெறுபேறென்றே கொள்ள வேண்டும். இந்நிலையில் வேதமோடாகமம் என்கின்ற மெய்ஞ்ஞான நூல்களும் இறைவழி நின்ற மெய்ஞானிகளின் மூலங்கிடைக்கப் பெற்றன. இந் நன்கொடை ஆலய அமைப்பு ஆலயக் கிரியைகள் மனித வாழ்க்கை என்பவற்றுக்குப் பேருபகாரமாக அமைந்து விட்டது. இந்நிலையில் ஆலய பரிபாலனம் என்ற ஒன்று தன் பாட்டுக்கே இங்கு புகுந்து விட்டது. அதன் பேறாக ஆலயம் பற்றிப் பல விடயங்களை மகாரிஷிகள் கூறிவைக்க வேண்டியதாயிற்று.

பரிபாலனங்கள் பல. நமக்குத் தெரிந்த ஒன்று இராச்சிய பரிபாலனம் ஆகும். இதனைத் தவிர வாக்கிய பரிபாலனம் ஒன்று இருக்கிறது. நாம் சொல்லும் சொல்லைக் காப்பாற்றுவதுதான் அது. நாம் நம் சொல்லைக் காற்றோடு பறக்கவிட்டு அப்படி நான் சொல்ல வில்லையே என்று கூறிவிடுவோம். அத்துடன் விஷயம் முடிந்து விடும். ஆனால் தன் வாக்கை மாத்திரமல்ல தந்தை தாய் வாக்கியப் பரிபாலனம் செய்தவன் தசரதராம குமாரன் என்று குமரேசர்சதகம் கூறுகிறது. இவற்றினை நாம் அறிந்திருத்தல் நன்று. இவற்றை விட ஆலய பரிபாலனம் மேலானது. இதனைத் தேவ பரிபாலனம் என்று கூடச் சொல்லலாம். இப்பரிபாலனத்துக்குச் சிறந்தவர் சண்டேஸ்வர நாயனார் என்பது இறையருட் கருத்து. ஆலயச் சொத்துக்கள் அவர் பெயரிலேயே எழுதி வைக்க வேண்டுமென்பதும் நாம் வழிபாட்டுப் பலனை அவர் மூலமாக வேண்டப்பட வேண்டுமென்பதும் தெரிந்து கொள்ள வேண்டியன. தர்ம சாஸ்திரத்தில் ஆலய வழிபாட்டின் அவசியத்தை எடுத்துக் காட்டி ஆலயத்தின் தர்மகர்த்தா, பூசை செய்பவர், மற்றும் கருமங்களை வேதனத்துக்கோ தொண்டெனக் கருதியோ செய்வோர் முதலாம் பணியாளர்கள் எங்ஙனம் பணியாற்ற வேண்டும் என்பதை நன்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. வழிபடும் பக்தர்கள் எவ்விதம் வழிபட வேண்டும் என்பதையும் இந்நூல் தெளிவாகக் கூறியுள்ளது. ஆலயம் வழிபடும் பக்தர்க்கேயன்றி பரிபாலனம் செய்வோருக்கும், பூசை புரிவோர்க்கும் அல்ல என்பதையும் சிறப்பாக அறிதல் வேண்டும். ஆயினும் அவர்கள் வழிபடுவோருக்காகப் புரியும் ஒவ்வொரு ஆலய பணிகளும் திருப்பணிகளாகக் கருதப்பட்டு புண்ணியங்களாக விளையும் என்பதை தர்ம சாஸ்திரம் தெளிவாகக் கூறுகிறது. மன மாசுடன் அங்கு செய்யும் தகாத செயல்கள் யாவும் பாவ விளைவுகளையே உண்டு பண்ணும் என்பதனையுந் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு ஊரின் நன்மை தீமைகள் அவ்வூரின் பிரதான கோவிலில் நடக்கும் நித்திய, நைமித்திய பூசைகளிலும் அங்கு அனுசரிக்கும் ஆகம விதிகளிலும் தான் தங்கியுள்ளன. மனிதர்களுக்குத் தெய்வ நம்பிக்கை உதயமாக "பக்தி" தானாகவே உண்டாகிறது. பக்தி வர சமய ஆசார அனுட்டானங்களும் இயற்கையாகவே வருகின்றன. இவ் ஆசான அனுட்டானம் உள்ளவர்கள் இருக்கும் இடங்களில் தெய்வங்களின் சாநித்தியம் தோன்றும். அங்கு மாதம் மும்மாரி பொழியும். அங்கு மக்கள் சுபீட்சமாக வாழ்வார்கள். இவற்றினை நன்கு தர்ம சாஸ்திரம் விளக்கிக் கூறுகின்றது.

**நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்**
**பத்தடுத்த கோடி உறும்** 817

அறிவூட்டாமல், பிறரைச் சிரித்து மகிழ வைப்பதையே தொழிலாகக் கொண்டு பொருள் பெறும் குறும்பர், காமுகர், கோமாளிக் கூத்தாடி போன்றோர் நட்பால் வரும் இன்பத்தை விட, பகைவரால் வரும் துன்பம் பத்துக்கோடி மடங்கு நல்லதாகும்.

"சோதிடம் கூறும் சோதிடனும்", நீதி வழங்கும் நீதிபதியும், காரணமின்றிப் பரிகாரம் பண்ணுபவனும், தேவாலயத்தில் பூசை செய்யும் அர்ச்சகரும் சாஸ்திர ரீதியாக செய்யாவிட்டால் பிரம்ம ஹத்தி தோஷம் வரும் என்று மகான்கள் கூறியிருப்பதால் பயபக்தியுடன் ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்பது தர்ம சாஸ்திர முடிபாகும்.

ஆலய கிரியைகளும் உற்சவாதிகளும் சிவாச்சாரியாரில் தங்கியுள்ளன. வேதாகமப் பயிற்சியுடன் ஒழுக்க நெறி நிற்றலும், ஆசார அனுட்டான சீலமும் அவருக்கு வேண்டற் பாலன. ஆலோசனை வழங்கலும் அறிவுரை கூறி பக்தர்களையும் தர்மகர்த்தாக்களையும் நெறிப்படுத்தல் அவரின் தலையாய கடமையாகும். ஆலயத்தில் உள்ள மற்ற தொழும்பாளர்க்கு வழங்கப்படுவது வேதனம் (சம்பளம்) சிவாச்சாரியர்களுக்கு வழங்கப் படுவது தட்சணையாகும். அத்துடன் ஆலய கிரியைகளின் போது தானமும் வழங்கப்படுதல் வேண்டும். நாம் வழங்கும் தட்சணையும் தானங்களும் அன்னார் வாழ்க்கையை நன்கு நடாத்தப் போதியதாக அமைதல் வேண்டும். சிவாச்சாரியாரைச் சிவனெனக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். அவரின் கிரியைகள் மூலமும் பாவனைகள் மூலமும் தன்னைச் சிவனாகப் பாவித்து நாட்டுக்கும் மக்களுக்கும் எவ்வித குறையும் நிகழாமல் இறை கைங்கரியம் புரிதல் வேண்டும். இவை மாற்றமடையும் பாதக விளைவே. அர்ச்சகர் ஆலய பூசைக் கருமங் களைச் செய்பவராவர். இவர் தெய்வத்தில் பயபக்தி உள்ளவராகவும் முற்கோபம் இல்லாதவராயும் தூய்மையான ஆடையை தரிப்பவராகவும் நல்ல பழக்கவழக்கங்கள் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

ஆகம விதிகளைக் கற்றுணர்ந்து, வியாபகம், நியாசம், துவாரபூசை, கற்பாவரணபூசை, பிம்பசுத்தி, ஆதாரசக்திபூசை, ஆசனபூசை, ஆவாகனம், தூபதீப, ஆர்க்கய சோடோபசாரம், அபிடேகம், அலங்காரம், ஆவரணபூசை, தூபதீப ஆர்க்கயம், நைவேத்தியம், தீபாராதனை வேத, திருமுறைப் பாராயணம், அட்டோத்திர அர்ச்சனை, பூசா சமர்ப்பணம் என்பனவாய ஆராதனையின் அங்கங்களையும் ஆலய அர்ச்சகர் முறைப்படி செய்ய அறிந்திருத்தல் வேண்டும்.

அர்ச்சனை நாமாக்களை முறைப்படி பாராயணஞ் செய்தும் தீட்சை பெற்றுமுள்ளவரே ஆலய பூசை செய்யத் தகுதியடைந்தவராவர். விபூதிப்பையை இடுப்பில் செருகி வைத்திருக்கவும் அவருக்கு உரிமையுண்டு. அத்துடன் ஆலய மூலமூர்த்தி தொடக்கம் பிரகாரத்தில் பிரதிட்சை செய்து வைத்திருக்கும் அத்தனை மூர்த்தங்களினது அட்டோத்திர நாமாவளியையாவது பாடமாக்கி வைத்திருக்கும் அர்ச்சகரே அவ்வாலயத்தின் அர்ச்சகராக இருக்கத் தகுதியுடையவராவர். அர்ச்சகர் பிரதான ஆலயமூலவர்க்கும் பக்தர்களுக்கும் பாலமாக இருக்க வேண்டும். ◆

**அதிதி**

அதிதி முன்னொரு காலும் அறியப்படாத பரதேசி. அவன் ஒரு நாளிருந்தாற்றான் அதிதி எனப்படுவன். ஊரிலிருப்பவனையும் வேறொரு நிமித்தத்தினால் வருபவனையும் அன்னத்தின் பொருட்டு ஊர்தோறுந் திரிகின்றவனையும் அதிதியெனக் கொள்ள லாகாது.

ஒல்லும் கருமம் உடற்று பவர் கேண்மை
சொல் ஆடார்சோர விடல் 818

தம்மால் முடியும் செயலையும் முடியாததாகக் காட்டி நடித்து, உதவாமல் கெடுப்பவரின் நட்பை, அவருக்குச் சொல்லாமலே மெல்ல மெல்லத் தளர விட வேண்டும்.

# திருவருட்பயன்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்

**ஒன்பதாம் அதிகாரம் - ஐந்தெழுத்தருணிலை**

**வேதாகமங்களிலுள்ள உண்மைகள் ஐந்தெழுத்தி லடங்கியன.**

**அருணூலு மாரணமு மல்லாதும் ஐந்தின்**
**பொருணூல் தெரியப் புகும்.**

பதவுரை: அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் - சைவாகமங்களும் வேதங்களும் உபாகமம் முதலிய மற்றைய ஞான நூல்களும், ஐந்தின் பொருள் நூல் ஐந்தெழுத்தின் பொருளை உணர்த்தும் நூல்களாம், தெரியப்புகும் - இவ்வைந்தெழுத்தை ஆராயின் அவை அதில் அடங்குதல் புலப்படும்.

**பிரணவத்துள் அடங்கும் பொருள்கள்**

**இறைசத்தி பாச மெழின்மாயை யாவி**
**உறநிற்கு மோங்காரத் துள்.**

பதவுரை: இறை- - சிவமும், சக்தி - திருவருளும், பாசம் - மலமும், எழில் மாயை- (ஆன்மாவின் சிற்சத்தியை இறுதியிற் பூரணமாக விளக்கும்) சிறப்பினையுடைய திரோதான சத்தியும், ஆவி - ஆன்மாவும், ஓங்காரத்துள் உற நிற்கும் - பிரணவத்தினுள்ளே பொருந்தி நிற்கும்.

**ஐந்தெழுத்துள் அடங்கும் பொருள்கள்.**

**ஊன நடன மொருபா லொருபாலாம்**
**ஞானநடந் தானடுவே நாடு.**

பதவுரை: ஊன நடனம் - ஒருபால் - பிறப்பினை விளைக்கும் திரோதானமும் மலமும் ஒரு பக்கத்திலுள்ளன. ஞான நடம் ஒருபால் ஆம் - மோட்சத்தை யுதவும் சிவமும் சத்தியும் ஒரு பக்கத்திலுள்ளன. தான் நடுவே - ஆன்மாவாகிய தான் நடுவிலுள்ளது. நாடு - (இவை ஐந்தெழுத்திலிருப்பதைக்) காண்பாயாக)

**ஆன்மாவின் பெத்தநிலையும் முத்திநிலையும் ஐந்தெழுத்தி லடங்குதல்**

**விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்**
**பெரியவினை தீரப் பெறும்.**

பதவுரை: ந மேவி ம விரிய - திரோதானசத்தி மலத்தைச் சார மலம் முயற்சி செய்ய, யவ்வை மீளவிடா - ஆன்மாவை (அவை பிறவிகளில்) அழுத்தும். (இது பெத்த நிலை); தம் பெரிய வினை தீர - (ஆன்மாக்கள்) தம்முடைய பெரிய பிணிகளாகிய மலங்கள் தீர, சி பெறும் - (திருவருட் சக்தியின் முயற்சியால்) சிவத்தை யடையும். (இது முத்தி நிலை)

**நகாராதிபஞ்சாட்சரம் உபாயமார்க்கர்க்குரியது**

**மாலார் திரோத மலமுதலா மாறுமோ**
**மேலாசு மீளா விடின்.**

பதவுரை: மாலார் திரோதம் மலம் முதலா - பிறவிப் பிணியிலே விடுவனவாகிய திரோ தானத்தையும் மலத்தையும் முதலாக வைத்து ஐந்தெழுத்தை ஓதினால், மாறுமோ - மலம் நீங்குமோ, நீங்காது; மேல் - மேலான பொருளாகிய சிவம். ஆச மீளாவிடின் ஊன நடனத்தைச் செய்விப்பவைகளின் இடத்தை எடுத்துக் கொண்டு அவைகளைக் கீழாக்காவிட்டால்

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு** 819

சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருப்பவரின் நட்பு, நனவில் மட்டுமன்றிக் கனவில் நினைப்பினும் துன்பம் தருவதாம்.

நகாராதிபஞ்சாட்சரம்

மோட்ச ஆசையுடையார் ஓதலாகாது

**ஆராதி ஆதார மந்தோ வதுமீண்டு**
**பாராது மேலோதும் பற்று.**

பதவுரை: ஆதாரம் ஆராதி - உனக்கு ஆதாரமாயிருக்கின்ற சிவத்தை முன்னாக வைத்து ஐந்தெழுத்தை ஓதி வழிபடு, அது மீண்டு பாராது - (உபாய மார்க்கத்திலே ஓதிய) நகாராதி பஞ்சாட்சரத்தின் இயல்பைத் திரும்ப விசாரியாமல் மேல் ஓதும் பற்று - (உண்மை மார்க்கத்தில் நிற்கும் போதும்) நகார மகாரங்களை முன்னாக ஓதுந்தன்மை, அந்தோ - கவலைப்பட வேண்டிய தொன்று.

சிகாராதி பஞ்சாட்சரமே மோட்ச

ஆசையுடையார்க்குரியது

**சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்**
**பவமிதுநீ யோதும் படி**

பதவுரை: சிவமுதலே ஆமாறு சேருமேல் - சிகாரம் வகாரம் என்னுமிரண்டும் முதலிலே வரும்படி உச்சரித்தல் கூடுமாயின், பவம் தீரும் - பிறவிக்குக் காரணமாகிய மலங்கள் நீங்கும், நீ ஓதும்படி இது - முத்திரை விரும்பிய நீ உச்சரிக்கும் முறைமை இதுவே.

வகாரம் ஆன்மாவைச் சிவமாக்குதல்

**வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே**
**ஆசி லுருவமுமா மங்கு.**

பதவுரை: வாசியருளி - சத்தியானது சிவத்தைக் காட்டி, அதை - ஆன்மாவை, வாழ்விக்கும் - வீட்டின்பத்தில் இருத்தும், அதுவே அங்கு ஆசுஇல் உருவமும் ஆம் - அந்தத் திருவருளே ஆன்மாவுக்கு முத்தியிற் குற்றமற்ற மேனியுமாயிருக்கும்.

முத்தி நிலையை விளக்கும் ஐந்தெழுத்து

**ஆசினவா நாப்ப ணடையா தருளினால்**
**வாசியிடை நிற்கை வழக்கு.**

பதவுரை: ஆசு இல் ந வா நாப்பண் - (முத்திநிலையடைந்த ஆன்மாவானது) குற்ற மற்றதாகிய திரோதானத்துக்குஞ் சிற்சக்திக்கும் நடுவில், அடையாது - (பெத்தான்மாவைப் போல்) நில்லாது, அருளினால் - திருவருளினால், வாசி இடையில் நிற்கை வழக்கு - சிற்சக்திக்குஞ் சிவத்துக்கும் இடையில் நிற்பது முறைமையாம்.

சாதனங்களுக் குயிராயுள்ளது திருவருள்

**எல்லா வகையு மியம்பு மிவனகன்று**
**நில்லா வகையை நினைந்து.**

பதவுரை: இவன் அகன்று நில்லா வகையை நினைந்து - ஆன்மாவானது சிவசத்தியின்றும் ஒருகாலமும் நீங்காமல் அதனோடு கூடுதற்கு ஏதுவாயிருக்குந் தன்மையைக் கருதியே, எல்லா வகையும் இயம்பும் - ஆன்மா முத்தியடைதற்கு உரிய அச்சாதன வழிகள் எல்லாவற்றையும் வேதாகமங்கள் சொல்லும்.


சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு
ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு
ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்பவேண்டிய முகவரி
*C. Navaneethakumar,*
*No. 4, Somagiri Place,*
*Colombo - 06.*
*Sri Lanka.*
*Tel : 2360406*
*Tel : 0779008286*


எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு 820

வீட்டில் தனியே இருக்கும் போது அன்பர் போல் நெருங்கிப் பழகி, அம்பலத்தில் பலரோடு கூடி இருக்கும் போது பகைவர் போலப் பழி கூறுபவர் நட்பு, எள் அளவும் தம்மை அணுகாத படி காத்துக் கொள்ள வேண்டும்.

# கும்பாபிஷேக தத்துவார்த்தம்

(பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் நயினை)

'மூவாய் பிறவாய் இறவாய் போற்றி;
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி;
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி;
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி;
ஆவாய் அடியேனுக்கு எல்லாம் போற்றி;
அல்லல் நலிய அலந்தேன் போற்றி;
காவாய் கனகத் திரளே போற்றி;
கயிலை மலையானே போற்றி! போற்றி;

அனாதி மலமுக்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாயினும், அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கி, போக, மோக்ஷங்களையடைய ஆலயத்தில் நிறுவப்படும் சிவலிங்கத் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாகும். கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு - பெருஞ் சாந்தியாகும்.

சுத்த சிவஜோதி நிஷ்கள நிருத்தவத்தில் நின்று உண்டான எல்லை கடந்த வட்ட வடிவான பரபிந்துவையுடைய நாதமயமான சிவம் தோன்றி அதில் நின்று எல்லைகடந்த பராசக்தி தோன்றும். அதில் நின்று எல்லைப்பட்ட அபரநாதம் தோன்றும். அதில் நின்று எல்லைப்பட்ட அபரபிந்து தோன்றும். அதில் நின்று ஆதிசக்தி தோன்றி உலக வியாபக பேதத்தால் இச்சா சக்தி ஞான சக்தி - கிரியா சக்தி தோன்றும். மேலே கூறிய அபரபிந்துவாகிய பராசக்தி முதல் பஞ்ச சக்திகளில் நின்றும் முறையே சிவசாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம் கர்த்துரு சாதாக்கியம் கன்ம சாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்கள் தோன்றும். இவற்றுள் கன்ம சாதாக்கியம் என்பது ஆலயத்தில் தாபிக்கப்பெற்ற லிங்க ஆவுடையாரின் உருவமாகும். இதுவே அருவுருவமாகிய சதாசிவரூபமாம். இச் சதாசிவத்தினின்று மனோன்மணியும் மனோன்மணியினின்று மகேஸ்வரனும், மகேஸ்வரனிலிருந்து மகேஸ்வரியும், மகேஸ்வரியிலிருந்து ஸ்ரீ கண்ட உருத்திரரும் ஸ்ரீகண்ட உருத்திரரிலிருந்து உமையும் உமையிலிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிலிருந்து இலக்குமியும், இலக்குமியிலிருந்து பிரம்மாவும், பிரம்மாவிலிருந்து வாணியும் தோன்றி உலகத்தைக் காரியப்படுத்துகின்றார்கள்.

இங்ஙனம் செயல்படும் பொழுது உயிர்களின் பக்குவ நிலைக்கேற்ப அறிவு இச்சைகளையும், தநு, கரண, புவன, போகங்களையும் கொடுப்பார். ஆன்மாக்களாகிய நாம் இத்தநுவாகிய சரீரத்தைக் கொண்டு சிவசாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவு தலைப்பட்டு பதி புண்ணியமாகிய கும்பாபிஷேகம் முதலிய சிவதர்மத்தில் பங்குபற்றி தரிசிக்க வேண்டியது முதற்கடமையாகும். அங்ஙனம் தரிசிக்கும் அன்பர்கள் ஒவ்வொரு கிரியைகளையும் ஊன்றிக் கவனித்து உணர்ந்து தரிசித்தல் அதிகப் பயனைத் தரும் எனக்கருதியே இக் கட்டுரையினை எழுதத் தலைப்படுகின்றேன்.

1. தனபூஜை : திரவியத்தை பூசிப்பது புண்ணியவசத்தால் சம்பாதிக்கப்பெற்ற திரவியத்தை சிவார்ப்பணம் செய்து பின்னர் அதனை மூன்று பாகம் செய்து ஒரு பாகம் ஆலய கட்டிட வேலைக்கும், மற்ற பாகத்தைக் கொண்டு, நித்திய பூசை, மாதந்தோறும் வருகிற - நக்ஷத்திர திதிகளில் செய்கின்ற நைமித்திகச் செலவு, சுவாமிக்கு வேண்டிய திரு ஆபரணம். கிராமம் முதலியன வாங்குவதற்கும் மூன்றாவது பாகத்தால் கும்பாபிஷேகச் செலவும் செய்ய வேண்டும்.

இனி கும்பாபிஷேக பாகத்தைப் பதினொரு பாகம் செய்ய வேண்டியது.

| | | |
|---|---|---|
| 1. | யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு | - இரண்டு பாகம் |
| 2. | அபிஷேக திரவியம் | - ஒரு பாகம் |
| 3. | ஆசார்ய தக்ஷணைக்கு | - இரண்டு பாகம் |
| 4. | மூர்த்தியர்கட்கு | - ஒரு பாகம் |
| 5. | வேதம் தேவாரம் ஓத | - ஒரு பாகம் |
| 6. | தானாதிகட்கு | - ஒரு பாகம் |
| 7. | அன்ன தானத்திற்கு | - ஒரு பாகம் |
| 8. | சிற்பி பரிசாரகத்திற்கு | - ஒரு பாகம் |
| 9. | யாக சாமான்களுக்கு | - ஒரு பாகம் |

பதினொரு உருத்திரர்கள் பூஜித்தல் தனபூஜையாம்.

**2. அனுக்ஞை:-** உத்தரவு பெறுதல் தனது குரு; சர்வ சாதகர், போதகர் முதலானவர் களையும் சிவனையும் வழிபட்டு நல்ல வழிவந்த இந்தத் திரவியம் கும்பாபிஷேகச் செலவிற்கு யோக்யதை உண்டாகும்படியாகவும் சாஸ்திரப்படி செய்ய உத்தரவு தரவேண்டும் என உத்தரவு பெறுதலாம்.

சிவனிடம் உத்தரவு பெறுதலில் இரண்டுவகை உண்டு. ஒன்று சாங்கம், மற்றையது உபாங்கம். சிவனிடமும் சக்தியிடமும் கேட்டல் சாங்கமாகும் உபாங்கத்தில்

| | | |
|---|---|---|
| கணேசர் | சிவனாரின் | வலக்கண் |
| முருகன் | சிவனாரின் | இடக்கண் |
| நந்தி | சிவனாரின் | மூக்கு |
| சண்டிகேஸ்வரர் | சிவனாரின் | காது |

ஆதலால் இவைகளை நாம் செய்யும் கிரியைக்கு ஏற்றவாறு உணர்ந்து செய்ய வேண்டும். இது உபாங்க அனுக்ஞையாகும்.

**3. பிரவேச பலி :-** பிரவேசிக்கச் செல்லுமிடத்தில் உள்ள தேவதைகளைப் பூசித்து உணவு கொடுத்து எல்லோரையும் நோக்கி "கடல் வனம் மலை முதலிய இடங்களுக்குச் சென்று சுலபமாக இருங்கள். இவ்விடத்தில் இறைவனை இருத்த வேண்டும்" எனக் கூறி அவர்களைத் திருப்திப்படுத்தலாம்.

**4. வாஸ்து சாந்தி :-** வாஸ்துப் பிரமனை வழிபடல், பூமிக்கு அதிபதியாகிய பிரமனை பூசித்து பூமியின் அசத்பாவமாகிய குற்றங்களை எரித்து பின்னர் பிரமாவின் கந்த தன்மாத்திரையான மூக்கிலிருந்து உண்டானதாகப் பாவித்து அமிர்தத்தால் நனைத்து சுத்தமாக்கிக் கொள்வதே "வாஸ்து சாந்தி" யாம்.

**5. மிருத் சங்கிரகணம்:-** மண் எடுத்தல்.

முன் அமிர்தத்தால் நனைக்கப்பட்ட மண்ணை முளையிடுவதற்காக பூமிதேவியை வணங்கி அவள் வயிற்றினின்று எடுத்தலாம்.

**6. ஆசார்ய பூஜை:-** குருவை வழிபடுதல்.

பிரதான குருவுக்கு சகல உபசாரங்களும் கொடுத்து "குருவே! நீங்கள் பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும் பரப்பிரம்மாகவும் இருக்கின்றபடியால் இச் சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களைச் சிவானுக்கிரஹத்திற்குப் பாத்திரங்கள் ஆக்க வேண்டும் என வழிபடுதலாகும்.

**7. அங்குரார்ப்பணம் :-** முளை இடல்.

நெல் முதலிய நவ தானியங்களைப் பாலில் ஊறவிட்டு சந்திரனை வணங்கி உலக க்ஷேமத்தின் பொருட்டுப் பயிர் வளர்த்தலாம்.

**8. ரக்ஷாபந்தனம் :-** திருக்காப்பு அணிதல்.

உலக சம்பந்தத்தினால் ஏற்படுகின்ற குற்றங்களை நீக்கிக் கொள்ளவும் எடுத்த காரியத்தை இடையூறின்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் வாகீஸ்வரியின் கர்ப்ப நாடியிலுண்டானதாகப் பாவித்து நாகராஜனை பூஜித்துச் செய்வதாகும்.

**9. பூத சுத்தி :-** பூதங்களை சுத்தி செய்தல்.

பிருதுவி முதல் ஐந்து பூதங்களையும் இவை சம்பந்தமான ஆத்மாவையும் சுத்தப்படுத்து வதாகும்.

ஆன்மாவானது தனது அறிவு மயங்கி மாயையின் வயத்ததாய், மாயை செய்விக்கின்ற வேலைகளை நானே செய்விக்கின்றேன். எனது சொத்து, என்று அகங்கார மமகார மேலீட்டால்

செய்கின்ற, நினைக்கின்ற குற்றங்களை நீக்கி ஆத்மாவை சுத்தப்படுத்துவதாம். இங்ஙனம் சுத்தப்படுத்திய பின் இறைவனைப் பூசை செய்ய வேண்டியது.

இந்த பூத சுத்தியானது ஆத்மாக்கள் அடைகின்ற பதப்பிராப்தியினாலும், தீக்ஷா பேதங்களாலும் ஐந்து வகைப்படும். இதில் குரு மூர்த்தியானவர், சிவப் பிரத்தியங்க ராகையாலும், சிவாஸ்ரமிகளாகவும், ஆதி சைவர்களாகவும் இருப்பதால் சிருட்டிக் கிரமம் - திதிக்கிரமம் - சம்ஹாரக்கிரமம் - திரோபவக்கிரமம் - அனுக் கிரகக்கிரமம் என்பனவற்றுள் ஐந்தாவதாகிய அனுக்கிரகக் கிரமம் பூதசுத்தியே செய்தல் வேண்டும்.

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப் பஞ்சவித பாசமறுப் பார்."

(சைவசமயநெறி - 502)

தனது தேகமானது பிருதுவி முதலிய பஞ்ச பூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக் களால் முளையுண்டானதாகவும் ராகம், துவேஷம், தர்மம், அதர்மம், மோகங்கள் வேராகவும் வித்தை, அவித்தை அதிபதிகளாய் ரக்ஷிக்கிறதாகவும், கலை முதலிய தத்துவங்கள் சாரமாகவும், தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளைகளாகவும் விளையும் தளிராகவும், பிரபஞ்சம் புஷ்பமாகவும் புத்தி வியவசாயிகன் சங்கல்ப்ப பழமாகவும், பழரசத்தைப் புருஷனாகிற பக்ஷி புசிக்கிற தாகவும், பாவித்து வேர் மேலாகவும், தளிர் கீழாகவும் ஆலமரத்தைப்போல் தியானித்து தலைமுதல் பாதம் வரை, ஆகாசம், வாயு, அக்னி, ஜலம் பிருதுவி இவைகள் ஒன்றிலொன்று சேர்ந்து தோன்றும் விதையாகவும் பாவித்து ஜாதி, குலம், குணம் முதலியவற்றிற்குக் காரணமான தூல தேகத்தைத் தியானித்து யோனி க்ஷேத்திரத்தில், பிரமன் சிருஷ்டிப்பவராகவும் விஷ்ணு காக்கின்றவராகவும் தியானித்து நமது கர்மம் மூலமாகிய கிழங்காகவும், ஆணவம் முளையாகவும் தர்மாதர்மத்தைப் பாவித்து அத்துடன் ராகத்வேஷமோகம் உபமூலமாகவும் அவித்தை மாயாகர்மத்தில் இருந்ததாகப் பாவித்து வித்தை பரமெனவும் - இந்தப் பரம் பரிபாலிப்பதாகவும் பாவித்து, நடந்தது, நடக்கின்றது, நடக்கப்போகின்றது ஆகிய காலதத்துவ விருக்ஷம் அசையாதிருக்கும் பொருட்டு சராசரமாகப் பாவித்தல் வேண்டும். இனி தன் மாத்திரேந்திரியம் - ஞானேந்திரிய மென்றும் கன்மேந்திரியமென்றும் இரண்டாகப் பிரியும், அதைக் கொப்புள் கிளைகளாகவும் தியானித்து சப்தம் முதலிய ஐந்தையும் ஐந்து துளிராகவும், புத்தி சங்கல்ப பழத்தை பக்ஷி ரூபமான ஆத்மா புசிக்கிறதாகத் தியானிக்க வேண்டும்.

ஹோம் என்னும் மாத்திரத்தை ஐந்து முறை உச்சரித்து ஆலமரத்தை அசைவற்றதாகப் பாவித்து பின்னர் (ஹீம்) என்னும் மந்திரத்தை மூன்று முறை உச்சரித்து வலது கால் கட்டைவிரல் முதல் உண்டாகும் காலாக்னி யினால் உலர்ந்த பத்திரத்தை தகிக்கப்பட்டதாய் தியானித்து (ஹைம்) என்னும் மந்திரத்தை இரண்டு முறை உச்சரித்து தகித்த சாம்பலைப் பரந்ததாகத் தியானித்துப் பின்னர் ஹளம் என்னும் மந்திரத்தை ஒருமுறை உச்சரித்து பரந்த சாம்பல்களை சேர்த்து அந்த சாம்பரை சுத்த ஸ்படிகமாகவும், நிர்மலமாகவும், தியானித்து, முன் கூறிய ஆகாயத்துள் அடங்கியிருக்கும் சிவாபின்னமான ஆத்மாவை சிவனிடத்தில் சேர்த்து, எல்லா உபாதைகளில் நின்றும் ஓம் - ஹாம் சிவாய வௌஷட் - என சிகையில் நின்றும் அதோ முகமாக இருக்கும் பத்மத்தில் அமிர்தம் பெருகி வருவதாய் தியானித்து உள்ளும் புறமும் நனைத்து பின் இருதய கமலத்தில் ஓம் அகார உகார மகாரமும், அதிக ஒளியும் சர்வ வல்லமை முதலிய ஆறு குணங்களோடும், எல்லா வித்தைகளையும் உண்டாக்குகின்றதாகப் பாவித்து இருதய கமல கர்ணிகையின் நடுவில் இந்த ஆத்மா புரியட்ட தேகமுடையதாம் தியானித்து இந்த ஆத்மாவுக்கு உள்ளிருக்கும்

பரமாத்ம ஸ்வரூபமானது எல்லா ஐஸ்வரியங்களையும் கொடுப்பதாயும், சாந்தருபமாயும் ஆறு குணங்களால் நிறைந்துள்ளதாயும் உள்ள ஆத்மாவை சிவஸ்வரூபம் செய்து கலைகளைத் தாண்டி, பஞ்சப் பிரமத்தை ஆவாகித்து பிராசாத மந்திரத்தை தேஹத்தில் ஆவாஹித்து அஸ்திர மந்திரத்தால் திக்கு பந்தனமும், கவச மந்திரத்தால் மும்முறை சுற்றி கலாமயத்தைத் தாண்டி சிவஸ்ரூபத்தை உண்டாக்க வேண்டும். பின் தனது இடைநாடியால் பூரகமும், சுழுமுனா நாடியால் கும்பகமும் செய்து ஜீவாத்மாவைக் கொணர்ந்து ஜோதி ரூபமாக்கி, புருவ மத்தியிலிருந்து உண்டான அமிர்தத்தால் தனது தேகத்தை நனைத்து சிவனோடு ஐக்கியம் செய்க. இதன் விளக்கங்கள் சிலவற்றைக் குருமுகமாய்க் கேட்டுணர வேண்டியது. இது அனுக்கிரக பூத சுத்தியாம்.

அந்தர்யாகம் - உட்பூசை சிவபெருமானை வழிபட அந்தர் யாகம் மிக அவசியம்.

"அர்ச்சித்தா னந்தர் யாகம் புரியாதே பலத்தை வர்சித்தா னென்றே மதி"

(சைவசமயநெறி - 603)

நமது இருதய கமலமானது வாழைப் பூப் போன்றது, அப்பூவின் அடியிலிருக்கின்ற சுத்தமாயை அர்க்கிய பாத்திரமாகவும் பிந்துவிலிருந்து பெருகுகிற அமிர்தத்தை இதில் நிறைத்து பூசித்து அந்த ஜலத்தை சிரசில் புரோக்ஷித்து, இருதய கமல நடுவில் உள்ள கர்ணிகையில் சூர்ய - சந்திர அக்னி மண்டலங்களை பாவித்து முறையே சதாசிவம், மகேசம், சிவம் இவர்கள் இருப்பதாகவும், இந்த வாழைப்பூவின் மத்தியிலுள்ள தாமரைப்பூ எட்டு இதழோடு கூடியதாய் தொப்புளுக்கு மேல் எட்டு அங்குலம் தாண்டி அந்தக் கமலம் வைக்கப்பட்டுள்ளதாய் இந்தத் தாமரைப் பூவில் அடித்தண்டு ஒன்பது துவாரமுடையதாய் நான்கு பக்கங்களிலும் கர்ணிகையோடு கூடியதாய், கர்ணிகைக் கேசங்கள் கட்டைவிரல் இறையின் நீளமுயரமுள்ளதாய் இந்தக் கர்ணிகையில் சூரிய மண்டலமும், இதன் நடுவில் சந்திர மண்டலமும் இதன் நடுவில் அக்னி மண்டலமும் இருப்பதாய் தியானித்து சூரிய மண்டலத்தில் அனாகத சிவத்தையும், சந்திர மண்டலத்தில் அமனஸ்க சிவத்தையும், அக்னி மண்டலத்தில் சிவபெருமானையும் பாவித்து குண்டலினி சக்தியை ஆசனமாக வைத்து இருதய கமலத்தில் சக்தியாதி சக்திபரியந்தம் பூஜித்து அதற்குமேல் ஈசானாதி பஞ்சப் பிரமத்தாலும், ஞானமய தேகம் கற்பித்து நேத்திரம் கொடுத்து மூலத்தால் வியாபகம் செய்து இருதயாதி ஆறு அங்கங்களையும் பூஜித்து அஹிம்சாதி அஷ்ட புஸ்பங்களால் அர்ச்சித்து பொறுமை அர்க்கிய பாத்திரம் அமிர்தம் அர்க்கிய ஜலம் க்ஷீப்த சக்தியில் நின்று பெறுகிற பால் அபிஷேகம், புத்தி குங்கும கர்ப்பூர, கஸ்துாரி, கோரோசனை சந்தனாதிகளால் பூசுதல்.

மனமயமான ஆதார பாத்திரத்தில் பிசாணாபான வாயு அக்கினி அகங்கார கர்வம் இவைகள் தூப, தீபமாகவும், பிருதுவியிலிருந்து உண்டான தன் மாத்திரைகள் உபசாரங்களாகவும் , ஜலம் உட்கொள்ளவும், அக்னி கண்ணாடியாகவும் , வாயு விசிறியாகவும், ஆகாசம் தோத்திரமாகவும் பிருதுவி நைவேத்தியமாகவும் பாவித்து பூசிக்கவும், யோகப்பயிற்சி தெரியாதவர்கள் இருதய கமலத்தில் வித்யா பீடத்தில் சிவாசன மூர்த்தி மூலத்தால் பூசித்துத் தியானிக்கலாம். பின்னர் நாபி குண்டலத்தில் உள்ள சித்அக்னியில் ஹோமம் செய்யவும்.

எங்ஙனமெனில் சுத்தமாயை குண்டம், இச்சை, ஞானம், கிரியை மூன்றும் மேகலையாம்; மூலாதாரம் நெய்ப்பாத்திரம் அமிர்த தாரையே நெய், குண்டத்தில் சிதக்னியை உண்டாக்கி, துவாத சாந்தத்தில் கொண்டு போய்ச் சேர்த்து அந்த அக்னியை சுழுமுனா நாடி வழியாக நாபி குண்டத்தில் வைத்து மூலமந்திரத்தாலும், பிரசாத

மந்திரத்தாலும், நூற்றெட்டு ஹோமம் செய்து சுஷும்னா நாடி, இடை நாடியாகிய சிருக்கு சிருவங்களால் நெய்யைப் பூரித்து வௌஷட் என்னும் பதத்தை அந்தமாகவுடைய பிரசாதக மந்திரத்தால் பூர்ணாகுதி செய்ய வேண்டும். இது ஹோமமாகும்.

இனி சமாதியாவது, ரேசகபாதியால் கும்பகம் செய்து அனாசத சிவத்தை அமனஸ்க்க சிவத்தில் சேர்த்து , அமனஸ்க்க சிவத்தை பரமசிவத்தில் சேர்த்து, தியானிக்கவும். இதனால் சித்தம் அழிந்து ஆனந்தம் உண்டாகி சிதானந்தன் ஆகின்றான். இச்சமாதி அணிமா முதலிய எண்வகை சித்திகளுக்கும் இருப்பிடமாம். சிதஸ்வரூபமான சிவபிரானிடத்தில் லயித்திருப்பது தான் அந்தர்ய ஜனமாம். பின்னர் பிந்துவை எங்குமுள்ள தாகத்தியானித்து நக்ஷத்ராகாரமாயுள்ள பரமேஸ்வரரை தியானித்து சந்தனத்தால் நெற்றியில் பொட்டிட்டு மூலமந்திரம் உச்சரித்து சிகையில் புஷ்பம் ஒன்று தரித்துக் கொள்வது ஆத்மபூஜையாகும்.

பின்னர் சிரசு முதல் பாதம் வரை சித் சக்திமயமான தேகத்தை உண்டாக்கி ஈசானம் முதலிய மந்திரங்களாலும் முப்பத்தி எட்டு என்னும் கணக்கினையுடைய கலாநியாசம் செய்ய வேண்டும். இனி மூலாதாரம் முதலிய ஆறு இடங்களிலும் கிரந்தாக்ஷரக் கணக்கின்படி வகரம் முதல் ஸகரம் ஈறாக நான்கு எழுத்தும், பகரம் முதல் லகர மிறுதியாக ஆறு எழுத்தும் டகரம் முதல் பகரமீறாகவும் ககரம் முதல் டகரம் இறுதியாகவும் அகரம் முதல் பதினாறு உயிர் எழுத்துக்களும், ளவும், க்ஷவும் ஆக முறையே 4, 6, 10, 12. 16, 2 என்னும் கணக்குப்படி முறையே மூலாதாரம் முதல் ஆக்ஞை ஈறாக ஆறு இடங்களிலும், பிரம்மா முதலிய ஐந்து மூர்த்திகளையும் ஐந்து இடங்களிலும் இதற்கு மேல் சிரசிற்கு மேல் ஓர் அங்குலம் அல்லது சிரசிற்கு மேல் பன்னிரெண்டு அங்குலம் ஆகிய இடங்களில் ஓர் இடத்தில் ஆயிரம் இதழ்களோடு கூடிய கமலத்தின் மேல் சித்ஸ்வரூபியாகவும், சூக்ஷ்மரூபம் உடையவராகவும் நிஷ்களராகவும், ஷாட்குண்யராகவும், ஞானமய தேகமுள்ள வராகவும் சிவனைத் தியானிக்கவும்.

பின் அகரம் முதல் க்ஷகரம் ஈறாக ஐம்பத்தொரு அக்ஷரங்களையும் சிரசு முதல் பாதம் வரை நியாசம் செய்து, பின்னர் கிரியை செய்யும் பொருட்டுத் தனது கைகளை சிவரூபமாக்க வேண்டியது. பின்னர் தான் இருக்குமிடத்தை அஸ்திக மந்திரத்தால் மும்முறை தட்டி பத்துத் திக்குகளிலும் சிவமந்திரத்தால் சோடிகா முத்திரை செய்து கவசத்தால் மும்முறை சுற்றி அக்னிமயமான மூன்று மதில்கள் உண்டாக்கி சக்தி மந்திரத்தால் தேனுமுத்திரையும் காட்டி ரக்ஷிக்கப்படுவதாகியதான சுத்தியையும் செய்து பின் அர்க்கிய ஜலத்தால் தன் சிரசிலும் பூஜாந்திரவியங்களிலும் அஸ்திர மந்திரம் சொல்லித் தெளித்து திரவிய சித்தி செய்ய வேண்டியது.

பின் பிராணாயாமத்தால் மூல மந்திர முச்சரித்து துவாத சாந்தத்தில் பரசிவத்தையும், லலாடத்தில் அமனங்க சிவத்தையும், கண்டத்தில் அனாகத சிவத்தையும் தியானித்து ஆசனத்தில் சிவாசனமும், இருதயத்தில் சிவ மூர்த்தியும், சிரசில் சிவத்தையும் பூஜித்து பிரமாங்கத்தை அபிமந்திரித்து மூலமந்திரம் உச்சரித்து சிரசில் புஷ்பம் வைத்து, சிவாகாரமாக பாவித்து பிரசாத மந்திரத்தை ஹ்ருஸ்வ தீர்க்க புலுத - சூக்கும அதி சூக்கும கிரமப்படி மூலாதாரம் முதல் துவாத சாந்தம் வரை ஓம் காரம் முதல் நமோந்தம் இறுதியாக முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், அனாஹத அமனஸ்க்கஉன்மனீ புரசிவாந்தம் தியாகக்கிரமமாய் உச்சரித்து மந்திர சுத்தி செய்து கொள்ள வேண்டியது. இதுவே பூத சுத்தி எனப்படும்.

இவற்றுள் சிலபகுதி கடினமாயினும்

கஷ்டப்பட்டுத் தெரிந்து செய்யின் செய்வோருக்கும் செய்விப்போருக்கும் பெரும் பலனுண்டு. ஆன்மசுத்தி, பூதசுத்தி, அர்தா யாகம் சமாதியாகிய மூன்றின் தொகுதியாகும். இது நாவலர் பெருமான் அருள்வாக்கு.

பின்னர் யாகத்தில் கும்பம் வைத்து பூஜித்து மூர்த்திகட்கு தான்யாதி வாசம், ஜலாதிவாசம் முதலியன செய்து மருந்து சாத்தி எண்ணெய்க் காப்புச் சாத்தி பிம்ப சுத்தி முடித்துப் பின்னர் குறித்த முகூர்த்தத்தில் இறைவன் சன்னதியில் ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து பூசித்து நல்ல முகூர்த்தத்தில், பக்தர்கள் தோத்தரிக்க வேத தேவார பாராயணங்களோடு, சகல வாத்திய இசைகளுடன் குருமூல மந்திரம் உச்சரித்துக் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டியது வர்த்தனி கும்பத்தைப் பீடத்திலும், அஷ்டவித்யேஸ்வர கும்பத்தை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து விசேட பூஜை செய்ய வேண்டியது.

பின்னர் நாற்பத்தி ஐந்தாம் நாள்வரை விசேட அபிஷேக பூஜை செய்து ஈற்றில் சங்காபிஷேகம் செய்து நித்திய, நைமித்திய, காமிய பூஜைகளை முறைப்படி செய்வித்து திருவருளுக்குப் பாத்திரர்களாகி, மனோபீஷ்டங்களைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெறுவார்களாக!

# சந்தேகம் தெளிதல்

கேள்வி : 'ஓர் அசைவர் ஆடு மாடு கோழி போன்ற ஜீவன்களைச் சாப்பிடுவது ஜீவ ஹிம்சை என்கிறீர்களே? தாங்கள் உண்ணும் காய்கறிகளிலும் உயிர் இருக்கிறதே அது ஜீவ ஹிம்சை ஆகாதா?' என்று என்னைக் கேட்கிறார்கள்.

பதில் : நெல் முதலிய தானியங்கள் உயிர் தோன்றும் உடம்பேயன்றி அவை உயிராக மாட்டா, ஒரு முருங்கை மரத்தின் கிளையை வெட்டி நாலு துண்டுகளாக்கி, நான்கு இடத்தில் நட்டால் நான்கு முருங்கை மரங்களாக ஆகிவிடும். அதுபோல் ஓர் ஆட்டுக்காலை வெட்டி நான்காகத் துண்டித்து நாலு இடத்தில் நட்டால் நான்கு ஆடுகளாக ஆவதில்லை. ஆகவே, புலால் உணவுக்கும் மரக்கறி உணவுக்கும் நிரம்ப வேற்றுமை உண்டு. செடி கொடிகளை வேருடன் பிடுங்குவதில் சிறிது பாவமுண்டு. ஆடு, கோழி முதலிய உயிர்கள் ஐயறிவுப் பிராணிகள், செடி, கொடிகள் ஓரறிவுப் பிராணிகள், ஆடு, கோழிகளை, வெட்டுகிறபோது அவை கதறித் துடிக்கின்றன. காய்கறிகளை எடுப்பது பாவமாகாது. இது நமக்கு நகமும் முடியும் அகற்றுவது போல் ஆதலினால், அவைகளை அதிதிகளுக்கு இட்டு மிகுதியை உண்ணுதல் வேண்டும்.

# திருமூலர் திருமந்திரம்

## திருநீறு

டி. வி. வெங்கட்டராமன்

திருநீறை விபூதி என்றும் சொல்வார்கள். விபூதி என்பது என்றும் மறையாத செல்வம் பொருட்செல்வம், வந்துபோகும். அருட் செல்வம் வந்தால் போகாது. விபூதி அருட் செல்வத்தைப் பெற உதவும் சிவனடியார்கள் எப்போதும் முழுநீறு பூசிய முனிவர்களாக விளங்கினார்கள். நீறு பூசியவர்களை சிவனாகவே பாவித்து வழிபட்டார்கள்.

சேரமான் பெருமான் நாயனார் ஒரு நாள் யானை மீது நகர்வலம் வந்து கொண்டிருந்த போது உவர்மண்ணால் உடம்பு முழுவதும் வெளுத்திருந்த ஒருவனைப் பார்த்தார். அவரை சிவனடியார் என்று நினைத்து நாயனார் யானையை விட்டு இறங்கி, வண்ணான் முன் சென்று அவரைத் தொழுதார். ஒரு அரசன் இதைச் செய்வானா? வண்ணான் பயந்துவிட்டான். " சாமி, நீங்க என்னை யாரோ என்று கருதுகிறீர்கள். நான் வெறும் வண்ணான்!" என்றான். சேரமான் நாயனாருடைய பதில், அவருடைய உயர்ந்த பண்பை வெளிக்காட்டுகிறது. "நீங்கள் வருந்த வேண்டாம்" என்கிறான். மன்னன், "உங்களிடம் நான் கண்ட வேடம் (திருநீறு பூசியது போல, உடலில் உவர் மண் அப்பியிருந்தது.) சிவனடியார்களுடைய கோலத்தை நினைப்பித்தது. அடியேன் அடிசேரன்! நீங்கள் செல்லலாம்" என்று கூறினார். திருநீறினை யார் பூசியிருந்தாலும் அவரை வழிபடுவது சிவனடியார்களின் கொள்கையாக இருந்தது.

ஆனால் அந்தக் கொள்கையைத் தவறாகப் பயன்படுத்தி சிவனடியார்களுக்குத் தீங்கிழைத்தவர்களும் உண்டு.

மெய்ப்பொருள் நாயனாருடைய எதிரியான முத்தநாதன், அவரைப் போரில் தோற்கடிக்க இயலாமல் வஞ்சக வழிகளை மேற்கொள் கிறான். சிவனடியார் போல வேடம் போட்டுக்கொண்டு, அவருடைய அந்தப்புரத்திற் குள் சென்று, புதிய ஆகம நூலைக் காட்டுவதாகச் சொல்லி, அவரை ஏமாற்றி கத்தியால் குத்தி விடுகிறான். முத்த நாதனைக் கொல்ல வந்த வாயில் காப்போனைத் தடுத்து நிறுத்துகிறார் மெய்ப்பொருள் நாயனார். ஏன்? அவன் சிவவேடம் பூண்ட காரணத்தால்," இவன் நம்மைச் சேர்ந்தவன். நீ இவனை நம்முடைய நாட்டுக்கு வெளியே பாதுகாப்பாகக் கொண்டுபோய் விட்டுவிட்டு, எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று காவலனுக்குக் கட்டளையிடுகிறார்.

ஏன்? சிவவேடம் போட்டவருக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது என்பதற்காக அவனும் அவ்வாறே செய்ததைக் கேட்டுவிட்டே உயிர் துறக்கின்றார் மெய்ப்பொருள் நாயனார்.

பாண்டி நாட்டின் தலைநகருக்கு திருஞானசம்பந்தர் சென்றிருந்தபோது பிற சமயத்தினர் அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். இதனைக் கேட்டறிந்த திருஞானசம்பந்தர், அதற்கு பாண்டிய மன்னனே பொறுப்பாளி என்ற வகையில் அந்தத் தீ அவனையே அடையச் செய்கிறார். அவனுக்கு

வெப்பு நோய் வந்து தாங்க முடியாமல் கஷ்டப்பட்டான். பிற சமயத்தினர் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை திருஞானசம்பந்தர் மதுரை சொக்கலிங்கப் பெருமானை வேண்டி அவனுடைய திருநீறே மந்திரமும், மருந்துமாகி நோயைத் தீர்க்கும் என்று 'மந்திரமாவது நீறு' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்து, மன்னனுடைய நோயைத் தீர்த்தார்.

திருநீறை பளிச்சென பூசிக்கொள்ள வேண்டும். பூசி மகிழ வேண்டும். அப்போது, வினைகளெல்லாம் ஓடிப்போகும். சிவகதி கூடும். சிவபெருமானுடைய திருவருளையும் ஞானத்தையும் பெற்று இன்புறலாம்.

**'கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை**

**மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்**

**தங்கா வினைகளும் சாரும் சிவகதி**

**சிங்காரமான திருவடி சேர்வரே!'**

## திருக்கோயில் உண்மைகள்.

நாம் கோயிலுக்குச் செல்வது நமது மனம் அடங்குவதற்காக, நமது ஆசைகள் ஒடுங்குவதற்காக தன் முனைப்பு, அகங்காரம் வலு இழப்பதற்காக திருவருளன்றி வேறொன்றும் இல்லை என்ற உணர்வு நம்முடைய உள்ளத்திலே உயர்வடைவதற்காக, நம்முடைய ஆன்மா பக்குவம் பெற்று, படிநிலை வளர்ச்சி பெறுவதற்காக கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

சிவாலயத்தின் அமைப்பை உற்று நோக்குங்கள் என்கிறார் திருமூலர். கருவறைக்குச் செல்வோம். அங்கே உள்ள லிங்க மூர்த்தியே நமக்கெல்லாம் பதியாகிய இறைவன் லிங்கத்திற்கு முன் பார்த்தால், ஒரு சிறு ரிஷபம் தெரியும். அதுவே பசுவாகிய சீவன். ரிஷபத்திற்குப் பின்புறம் உள்ளது பலிபீடம் அது. பாசம் அடங்கிய இடம். கருவறைக்கு வெளியேயும், பிராகாரத்தில் ஒரு பெரிய ரிஷபத்தைப் பார்க்கலாம். அங்கே பலிபீடமும் பெரிதாக இருக்கும். ஆன்மா பாசத்தோடும், தன்முனைப்போடும் நின்று கொண்டிருக்கும் நிலை அது. அங்கே தீவிர முயற்சி எடுத்து, ஏராளமான தியாகம் செய்ய வேண்டியிருப்பதால் பலிபீடமும் பெரிதாக இருக்கும். பின்னர் தன் முனைப்பு ஒடுங்கி கருவறையில் சிறிதாகி விடும். திருவருள் பெறுவதற்கான சாதனைகளில் முன்னேறுபவர்கள் இந்த உண்மைகளைத் தெரிந்து கொள்வார்கள்.

**'ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாகும்**

**ஆய பசுவும்**

**அடல்ஏறு என நிற்கும்**

**ஆய பலிபீடம் ஆகும் நற்பாசம் ஆம்.**

**ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே!'**

நன்றி : "பக்தி"

# மூர்த்திகளின் அபேதம்

காமகோடி

ஈசுவரன் தன் படைப்பான பிரபஞ்சம் நல்ல வாழ்வை அடையவும் அதனில் வாழும் பிராணிகள் தமக்கு வரும் தீமைகளிலிருந்து விலகி, நன்மை பெறவும், காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்றபடி பல உருவங்களை எடுத்துக் கொள்ளுகிறார். அல்லாமலும், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் போன்ற தம் காரியங்களுக்கும் அவர் பல்வேறு உருவங்களை எடுத்துக் கொள்கிறார். இன்னும் அவருடைய குணங்களும், செயல்களும் அளவில் அடங்காதவை. அவை ஒவ்வொன்றும் புலப்படும்போது அவருடைய தோற்றமும், அவருக்குரிய பெயரும் வெவ்வேறாக அமைகின்றன. இவ்வாறே உருவமும், குணமும், செயலும் அற்றவரான ஈசுவரன் உலகச் சிருஷ்டியைத் தம்கருணையால் ஸங்கல்பித்துக் கொண்டபோது தம்மை மூன்று உருவங்களாக ஆக்கிக் கொண்டு பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற பெயர்களைத் தரித்துக் கொண்டு படைப்பு, காப்பு அழிப்பு ஆகிய செயல்களைச் செய்யத் தொடங்கினார். அவ்வாறு பகுத்துக் கொண்ட தம் பகுப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் ஏற்றபடி பெயர், உருவம், கருவிகள், பிரசாதனங்கள் முதலியவற்றைக் கொண்டு தோற்றத்துக்கும் விவகாரத்திற்கும் ஏற்றபடி வெவ்வேறு பெயர்களையும் இடங்களையும் ஏற்படுத்திக் கொண்டார். இதுதான் உண்மை என்று நம் சாஸ்திரங்களும், பிற நூல்களும் சிறிதும் சந்தேகமில்லாமல் பறைசாற்றுகின்றன.

**பூ, மலை, நீர், உறையுள்; புள் ஏறு புள், கொடி:**
**வாய்மை வேல் அழி படைக்கலம்; - நாமம்**
**பிரமன் இறை கண்ணன்; பொன் தீக் கார்மேனி:**
**கருமம் படைப்பு அழிப்புக் காப்பு**

என்ற ஒரு பழைய வெண்பாவில் பிரமன், சிவபிரான், திருமால் ஆகிய மூன்று தேவர்களும் ஒருவரே என்பதை எப்படி அறிவுறுத்துகிறது என்பதைக் காணலாம். இதன் பொருள், முழுமுதற் கடவுளுக்கு இருப்பிடங்கள் தாமரை, கைலாசம், திருப்பாற் கடலான பூ, மலை, நீர் ஆகும்" கொடிகள் அன்னப்பட்சி ரிஷபம் கருடன் ஆகிய புள் ஏறு புள் என்பன. கருவிகள் வாய்ச்சொல் வேலாயுதம், சக்கரம் என்பன. பெயர்கள் பிரமன், சிவபிரான், திருமால் என்பன நிறம் பொன், நெருப்பு மேகம் என்பவை செயல்கள் படைப்பு அழிப்பு காப்பு என்பன.

இவ்வாறே ஞானசம்பந்தப்பிரானும் தம் திருவெழுகூற்றிருக்கைத் தேவாரத்தில்,

**ஓருரு வாயினை மானுங் காரத்து**
**ஈரியல் பாய்ஒரு விண்முதல் பூதலம்**
**படைத்து அளித்து அழிப்பமும் மூர்த்திக ளாயினை,**
என்று ஒருருவே மூவரான வரலாற்றைக் கூறுகிறார்.

இவ்வாறு மும்மூர்த்திகளான ஈசுவரன் தம் ஒவ்வொரு உருவத்திலும் பல்வேறு உருவங்களைக் கொண்டு செயலாற்றியிருப்பதை நாம் அறிவோம். சிருஷ்டி செய்யும் பிரம்மாவை விட அழித்தலும் ரக்ஷித்தலும் ஆன காரியங்களில் அதிபர்களான சிவபிரானுக்கும் திருமாலுக்குமே ஜீவராசிகளிடம் அதிக நெருக்கமான தொடர்பு உண்டு. அக்காரணம் பற்றியே அவ்விருவர்களும் பல வேறு ரூபங்களை எடுக்க வேண்டியவர்களாகின்றனர். பரமேசுவரன் எடுத்துள்ள உருவ பேதங்களுக்கு எல்லையேயில்லை. தத்துவமும் மூர்த்தியும் கூடிப் பாகு பாடு பெற்ற ஸத்யோஜாதம் முதலான ஐந்து வகைப் பிரபாவங்களாகிய

மூர்த்தி விசேஷங்கள் அஷ்ட வீரட்டங்களைச் செய்தருளிய எட்டு மூர்த்தி விசேஷங்கள் பக்தர்களுக்கு அநுக்கிரகம் பண்ணுவதற்காக ஒவ்வொரு சமயத்தில் தம்மைத் தோற்றுவித்துக் கொண்ட சந்திரசேகரர் உமாமகேசர் முதலான இருபத்தைந்து மூர்த்தி விஷேசங்கள் முதலான பல நூறு அவசரங்களை நாம் கேள்விப் படுகிறோம். அப்படியே தேவி விக்னேஸ்வரர் சுப்பிரமணியர் ஆகிய பல சிவாம்ச மூர்த்தி களும் தத்தமக்கெனப் பல உட்பேதங்களைக் கொண்டு உலகத்தை ரக்ஷித்து வருகிறார்கள். அப்படியே திருமாலும் வைகுண்டபதியாய் விளங்கும் போது ஒரு வகை ரூபமும் பெயரும் கொண்டு, அவதாரங்களில் வெவ்வேறு ரூபங்களும் பெயர்களும் பெற்று விளங்குகின்றார். அவதாரங்களிலும் உதாரணமாக இராமாயணத்தில் பட்டா பிராமனாக விளங்கும் போது ஒரு கோலமும் சேதுக்கரையான திருப்புல்லாணியில் சயன வீரராகவும் வனவாசத்தில் சீதா லக்ஷ்மணர்களுடன் மட்டும் கூடிய கோதண்டராமராகவும் மக்களால் வழிபட்டு வருவதைக் காண்கிறோம். அவரே ஓரிடத்தில் ரங்கநாதராக ஓர் உருவத்திலும் வேங்கடாசலபதியாக வேறோர் உருவத்திலும் மாறி இவ்வாறு பல்வேறு ரூபநாமங்களில் இருந்து கொண்டு நம்மைக் காப்பாற்றி வருகிறார்.

இவ்வாறு ஒரூரும் ஒருருவும் ஒரு பெயருமில்லாத பரம்பொருள் தம் கருணையால் தம்மைத் தாமே பல உருவங்களில் பல இடங்களில் பல பெயர்களுடன் புலப்படுத்திக் கொண்டு விளங்குவதோடு முனிவர்கள் அடியார்கள் முதலானவர்களின் விருப்பங்களுக் கேற்பப் பல்வேறு உருவங்களை எடுத்துக் கொள்வதுண்டு. இவ்வாறு பலதரப்பட்ட பேதங்களுள் ஒரு சிலருக்குச் சில உருவங்களும், மற்றும் சிலருக்கு வேறு சில உருவங்களும் பூஜைக்கும் வழிபாடுகளுக்கும் அமையும். இன்னும் ஒருவகை ஞானிகளுக்கு ஈசுவரனைப் பற்றிய எல்லையற்ற தத்துவங்களுள் சில ஏற்றனவாக, மற்றொரு வகை ஞானிகளுக்கு மற்றும் சில ஏற்கும். இப்படி ஈசுவர மூர்த்தங்களும் தத்துவங்களும் பலவாகப் பெருகி வந்த காலத்தில் வைதிகத்திற்கு மாறுபட்ட சில அந்நிய மதங்கள் நாட்டில் தோன்றின. அவை நிரீசுரவாதம் புரிந்து வந்ததனால் மக்களிடையே தெய்வ பக்தி குறைந்து விடுமோ என்ற அச்சம் நாட்டில் தோன்றிற்று. தோன்றவே அவரவர்களும் தம் தம் தெய்வமே மூல தெய்வமென்றும் அதுவே உயர்ந்ததென்றும் பிற தெய்வ உருவங்களெல்லாம் கீழ்ப்பட்டவை என்றும் பேசத் தொடங்கினார்கள். எல்லாத் தெய்வங்களும் ஒன்றின் வெவ்வேறு அம்சங்களே என்றும் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவ்வணக்கம் ஓரே பரம் பொருளையே சேரும் என்ற உண்மை சிலரால் மறுக்கப்பட்டது. இவ்வாறு நாஸ்திகத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதாகச் செய்த முயற்சி முறிந்து சமயத்திலேயே பிளப்புக்களை உண்டாக்கி ஸமரஸ புத்தியை நீக்கிப் பேத புத்தியை வளர்க்கத் தொடங்கியது. இந்தப் பிளவுகளில் சைவ, வைஷ்ணவ பேதங்கள் அதிகமாகக் காணப்பட்டன. இதனைக் கண்டு பெருந்தலைவர்களான சமயத் தலைவர்கள் பலர் மக்களுக்கு உண்மையை எடுத்துரைத்து சிவபிரானுக்கும் நாராயண பகவானுக்கும் வேற்றுமை இல்லையென்பதைத் தம் உபதேசங்களில் அழுத்திக் கூறுவர்.

சைவசமயப் பெரியோர்களுள் காலத்தால் மிகமுந்திய திருமூலர் தம் திருமந்திரத்தில்,

**ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்**
**ஆதிக் கமலத் தலர்மிசை யானும்**
**சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்**
**பேதித்து உலகம் பிணங்குகின் றார்களே.**

என்று கூறி வருந்துகின்றார்.

# உக்கிரபாண்டியர்

உக்கிரபாண்டியர் என்பவர் மதுரையிலிருந்து அரசாட்சி செய்தார். அக்காலத்தில் கிரகநிலை பிழைத்தமையால் சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்னும் மூன்று நாடுகளிலும் மழை பெய்யவில்லை. தமிழ் நாடுகள் மூன்றும் பஞ்சத்தினால் வருத்தமுற்றன. அதுகண்ட தமிழரசர் மூவரும் அகத்திய முனிவரை அடைந்து, தங்கள் நாட்டிலே மழையில்லாமையைச் சொன்னார்கள். அகத்திய முனிவர் அம்மூவரையும் நோக்கி "அரசர்களே! கிரகநிலை பிழைத்தமையால் பன்னிரண்டு வருஷம் மழை பெய்யாது, மழை பெய்விப்பவனாகிய இந்திரனிடத்தே சென்று கேளுங்கள்" என்றார். அரசர்கள் "நாம் இந்திரனிடத்தே செல்வது எப்படி?" என்றார்கள். அகத்திய முனிவர் "நீங்கள் சோமவார விரதத்தை நோற்று, சிவபெருமானுடைய திருவருள் பெற்று, ஆகாயவழிக் கொண்டு செல்லக்கடவீர்கள்" என்று உபதேசித்தார்.

தமிழரசர்கள் மதுரையை அடைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு, சோமவார விரதம் அனுட்டித்தார்கள். அந்த விரதப் பேற்றினாலே ஆகாய மார்க்கமாகச் சென்றார்கள். இந்திரன் அதனை அறிந்து அம் மூவரும் இருக்கும் பொருட்டு தனது ஆசனத்திற் பதிந்ததாய் மூன்று சிங்காசனம் போடுவித்தான். அரசர் மூவரும் தேவருலகத்தை அடைந்து இந்திரன் பக்கத்திற் சென்றார்கள். அவர்களுள் சேரனும் சோழனும் இந்திரன் காட்டிய ஆசனங்களில் இருந்தார்கள். உக்கிரபாண்டியர் இந்திரனுடைய சிங்காசனத்தில் ஏறி ஒருசேர வீற்றிருந்தார். இந்திரன் அவர்மேல் அழுக்காறு அடைந்தான். மற்றைய அரசரிருவரையும் பார்த்து, "நீங்கள் வந்த காரணம் என்னை?" என்று வினவினான். அவர்கள் "எங்கள் நாட்டிலே மழையின்மையால் வந்தோம்" என்றார்கள். இந்திரன் அவர்கள் நாடுகளில் மாத்திரம் மழை பெய்யும் வண்ணம் வரங்கொடுத்து அனுப்பினான். உக்கிரபாண்டியர் தன் ஆசனத்திலே வீற்றிருத்தலையும் மழை வேண்டாததையும் இந்திரன் பார்த்தான். அவருக்கு உயர்வாகிய உபசாரம் செய்பவன் பொல, அளவில்லாத வருத்தத்தோடு தாங்கும் ஒரு ஆரத்தை அவருக்குக் கொடுத்தான். அவர் அதனை வாங்கிப் பூமாலை போலக் கழுத்திலே தரித்துக் கொண்டார். இந்திரன் அதிசயம் கொண்டு, "அரசனே! இத்தினம் முதல் உன்னை உலகம் ஆரந்தாங்கு பாண்டியன் என்று மதிக்கக்கடவது" என்றான். உக்கிர பாண்டியர் அதனைச் சிறிதும் மதியாது மதுரையை அடைந்தார்.

இந்திரனுடைய கட்டளையினாலே சேரநாட்டிலும் சோழ நாட்டிலும் மழை பெய்தது. பாண்டி நாட்டில் மட்டும் மழை பெய்யாதிருந்தது. ஒருநாள் பாண்டியர் பொதியமலையிற் சென்று வேட்டையாடினார். அப்பொழுது புட்கலாவர்த்தம் முதலிய மேகங்கள் மலையில் விழுந்து மேய்ந்தன. பாண்டியர் அவைகளை (அம்மேகங்களின் அதிதேவர்களைப்) பிடித்துச் சிறையில் வைத்தார். இந்திரன் கோபங் கொண்டு பாண்டியனோடு யுத்தஞ் செய்யும் பொருட்டு மதுரையை வளைந்தான். அதனைத் தூதுவரால் அறிந்த பாண்டியர் நால்வகைச் சேனைகள் சூழ யானைமேல் ஏறிக்கொண்டு சென்றார். பாண்டியருடைய சேனைகள் தேவசேனைகளைக் கொன்றார்கள். இந்திரனும் பாண்டியரும் எதிர்த்துச் சமர் செய்தார்கள். இந்திரன் குலிசாயுதத்தைச் செலுத்தினான். பாண்டியர் தமது கையிலிருந்த சக்கரத்தைச் சுழற்றி வீசினார். அது குலிசத்தை விலக்கி

இந்திரனுடைய மகுடத்தைத் தள்ளி அழித்தது. உடனே இந்திரன் பயந்து ஓட்டமெடுத்தான்.

போர் செய்வதற்குப் பயந்து போன இந்திரன் "தங்கள் நாடுகளுக்கு மழை தருவேன்; மேகங்களைத் தருக, என்று உக்கிர பாண்டியருக்கு ஓலை விடுத்தான். ஓலை கொண்டு சென்ற தூதுவர் பாண்டியனுடைய திருவடிகளை வணங்கி ஓலையை நீட்டினார்கள். அங்கே உள்ள ஒருவர் வாங்கி வாசித்துக் காட்டினார். பாண்டியர் அதுகேட்டு, இந்திரனுடைய வார்த்தையை நம்பாது, மேகங்களைச் சிறை நீக்கி விடுதற்கு உடன்படாதவராயினார். அப்பொழுது இந்திரனுடைய சிநேகிதனாகிய ஒரு வேளாளன், "நான் பிணை" யென்று வணங்கி நின்றான். துன்பம் வரினும் உயிர் நீங்க வரினும் உண்மையைக் காத்துக் குற்றம் நீங்குமாறு நடக்கும் வேளாள மரபிற் பிறந்த அவனுடைய சொல்லை வேதம் போல் நம்பி உக்கிபாண்டியர் மேகங்களைச் சிறை நீக்கி விடுத்தார். இந்திரனுடைய ஏவலினாலே மழை பெய்து பாண்டி நாடு செழித்தோங்கியது.

# நல்லொழுக்கம்

சிலர் ஒவ்வொருநாளும் ஒழுங்காகச் சிவபூசை செய்கிறார்கள். சிவபூசை செய்து உண்டபின் பொய் வழக்குப் பேசப் போகிறார்கள். வேறு சிலர் பசியிருந்து அநேக விரதங்களை அநுட்டிக்கிறார்கள். விரதங்கள் முடிந்த பின்னர் ஆடு, கோழிகளைக் கொன்று உண்ணுகிறார்கள். வேறு சிலர் நித்தியமும் கோயிலுக்குப் போய் வருகிறார்கள். கோயிலிலிருந்த வந்த பின்பு பிறர் பொருளிலே ஆசைப்பட்டு அவர்களை வஞ்சிக்க முயலுகிறார்கள். சிலர் ஒவ்வொரு நாளும் தேவாரம், திருவாசகம் படிக்கிறார்கள். படித்து முடிந்த பின்பு தெய்வ ரூபமாகிய தங்கள் பிதா மாதாக்களைப் பல விதமாகத் துன்பப் படுத்துகிறார்கள். இப்படியானவர்கள் கடவுளை உள்ளபடி வழிபடுகிறவர்களல்லர்.

இவர்களுட் சிலருடைய எண்ணம், "நாம் கடவுளிலே இவ்வளவு அன்பாய் இருக்கிறோம். நாம் என்ன தீமை செய்தாலும் அவர் பொறுத்துக் கொள்வார்" என்பது. இதைப் போலக் கொடிய எண்ணம் வேறில்லை. மற்றெவர்களும் தாங்கள் செய்த குற்றத்துக்கு ஏற்ற அளவான துன்பத்தை அனுபவிப்பார்கள். ஆனால் இப்படியான எண்ணத்தோடு பாவஞ் செய்கிறவர்கள் மற்றவர்களிலும் பார்க்க நூறு மடங்கு அதிகம் துன்புறுவார்கள்.

வேறு சிலருடைய எண்ணம் சிவபூசை முதலியவற்றிற்கும் நல்லொழுக்கத்திற்கும் ஒரு தொடர்புமில்லையென்பது. அஃதாவது தீய ஒழுக்கம் சிவபூசைக்குத் தடையானதன்று என்பது இதுபோன்ற அறியாமை வேறில்லை.

◆

Regd No. QD/71/News 2007 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
வீமாஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regd No. QD/71/News 2007 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
வீமாஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.